REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 22 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 200 | Thursday 22, August, 2024 | 20 பக்கங்கள் | 50/-







# தலதா ஐ.ம.ச. எம்.பி. பதவியிலிருந்து விலகல்

## பாராளுமன்றில் நேற்று விசேட உரையாற்றிய பின் வெளியேறினார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி வேட்பாளர்களாக கட்சியின் தலைவரும் பிரதித் தலைவரும் வெவ்வேறு முனைகளில் தேர்தலில் போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாததால் ஒருவரை ஆதரித்து ஒருவரை நிராகரிக்க முடியாதென்பதாலேயே பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்தேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

சஜித் பிரேமதாச இன்னும் 05 வருடங்களுக்கு பொறுத்திருந்தால் இத்தகைய சவால் இருந்திருக்காதென்றும் தற்போது சஜித் பிரேமதாசவுக்கு பின்னால் இருப்பவர்கள் அவரை ஜனாதிபதியாக்குவதற்காக அன்றி அவர் மூலம் பாராளுமன்றத்துக்கு செல்வதற்கான வழியை அமைத்துக்கொள்வதற்கே சந்தர்ப்பம் தேடிக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

- கோட்டாபய ராஜபக்‌ஷ மீண்டும் இரண்டாம் பாகத்தை இயக்க முயற்சிக்கிறாரா? என்றும் எனக்கு தோன்றுகிறது
- ஐ.ம.சக்திக்கு விரைவில் ஜனாதிபதியாகும் அவசரம் இருக்கிறதோ என தோன்றுகிறது
- எங்கள் பாசறையை இரண்டாக பிரித்து போட்டியிட வைக்கும் இந்த முடிவை எனது மனசாட்சி ஏற்க மறுக்கிறது
- எங்கள் தாய்க்கட்சியின் தலைவரும் முன்னாள் உப தலைவரும் இன்று அரசியல் எதிரிகளாக மாறி விட்டனர்
- அன்று எதிர்காலத்தை பற்றி சிந்திக்காமல் எடுத்த முடிவு சரியானதா?



06

# ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும் கடமை முஸ்லிம்களுக்குள்ளது

## மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்தியவர் அவர்



### முஸ்லிம் பிரதிநிதிகள் ஒன்றுகூடி நேற்று தெரிவிப்பு

நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் அச்சமோ, சந்தேகமோ இன்றி வாழக்கூடிய சூழல் தேவை என்பதாலேயே தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முஸ்லிம் சமூகம் ஆதரவளிப்பதாக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று தெரிவித்தனர்.

நேற்று (20) கொழும்பில் நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு ஜனாதிபதிக்கு ஆதரவாக கருத்து தெரிவித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இந்த நாட்டிலுள்ள 60 வீத முஸ்லிம் சமூகம் வாக்களிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி,

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் ஒரு முக்கியமான தேர்தலாகும். இத்தேர்தலில் முஸ்லிம் மக்களும் முஸ்லிம் சமூகமும் தங்களுடைய எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் நம்பி இன்றுவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் வேலைத்திட்டத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

குறிப்பாக, கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இந்த தேர்தலில்

06

# அமெரிக்க பதில் துணை செயலருடன் சந்திப்பு



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பெருங்கடல்கள் மற்றும் சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் விவகாரங்களுக்கான அமெரிக்க பதில் துணைச் செயலாளர் ஜெனிபர் லிட்டில் ஜான், நேற்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களை குறைப்பது உட்பட கூட்டாண்மையை ஒருங்கிணைப்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கும் கலந்துகொண்டார்.



03

**பொருளாதார சுதந்திரத்தை வெற்றி கொள்ள அழைப்பு**

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச

### 2025 இல் இரத்து செய்யப்படவுள்ள

# சாரதி அனுமதிப்பத்திரங்களை இப்போதே புதுப்பிக்க முடியும்



அடுத்த வருடம் இரத்துச் செய்யப்படவுள்ள பழைய சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் தமது சாரதி அனுமதிப் பத்திரத்தை தற்போதே புதுப்பித்துக் கொள்ள முடியுமென மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

அதன்படி சுமார் 11 இலட்சம் பழைய கனரக சாரதி அனுமதி பத்திரங்கள் இரத்து செய்யப்படுமென்றும் அவர் கூறினார். புதிய

06

### ஜனாதிபதி ரணிலை தவிர வேறு

# எவராலும் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியுமென பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் இத்தேர்தலில் வெறுப்பு, தற்பெருமை அரசியலை நிராகரித்து உண்மையை மக்களுக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் ஐந்து வருடங்களுக்கு அதிகாரத்தை வழங்க இந்நாட்டின் புத்திசாலித்தனமான மக்கள் தீர்மானித்துள்ளதாகவும் நிமல் லான்சா எம்.பி. தெரிவித்துள்ளார்.

06

# அரசாங்க ஊழியர்களுக்கு 25,000 ரூபா கொடுப்பனவு தேர்தல் வாக்குறுதியல்ல

### இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசாங்க ஊழியர்களுக்கு 25,000 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கும் முடிவு தேர்தலுக்கான வாக்குறுதியல்ல என்றும் அது வெறும் ஜனரஞ்சக வார்த்தையுமல்ல என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

06

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# 10 கோடி ரூபா நட்டஈட்டை செலுத்தி முடித்த மைத்திரி



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செலுத்த வேண்டியிருந்த (100 மில்லியன்) 10 கோடி ரூபா நட்டஈட்டுத் தொகையை அவர்

06

### மீண்டும் மண்சரிவு எச்சரிக்கை

# தேவையாயின் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வலியுறுத்து

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மண்சரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. மண்சரிவுகள், பாறைகள் சரிவு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும், தேவைப்பட்டால் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறத் தயாராக இருக்குமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில்

06

# தலதாவின் வெற்றிடத்துக்கு கருணாரத்ன பரணவிதாரன



ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள நேற்று (21) தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து அவரது வெற்றிடத்துக்கு இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டு விருப்பு வாக்கு பட்டியலில் அடுத்த இடத்திலுள்ள கருணாரத்ன பரணவிதாரன நியமிக்கப்படவுள்ளார்.

### தொலைக்காட்சி நேர்காணலில்

# கைகலப்பில் ஈடுபட்ட தமிழ் எம்.பிக்கள் இருவர்



தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் நடைபெற்றுக்கொண்டிருந்த அரசியல் விவாத நிகழ்ச்சியின் போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம் மற்றும் வேலுகுமார் ஆகியோரே இவ்வாறு நிகழ்ச்சியின் இடைநடுவில் மோதிக்கொண்டனர்.

ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள எதிர்க்கட்சி

06

# அனுராதபுரத்தில் நாமலின் முதலாவது பேரணி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்‌ஷவின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் நேற்று (21) அனுராதபுரம் நகரில் கடபனஹ பிரதேசத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவும் கலந்துகொண்டார்.

# தேர்தல் விதிமுறைகளை மீறினால் கடுமையான சட்ட நடவடிக்கைகள்

### தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை



தேர்தல் தொடர்பான விதிமுறைகளை மீறும் எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் கடுமையான தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடுமென தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

குறிப்பாக குற்றம் சாட்டப்பட்ட வேட்பாளர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவருக்கான தண்டனையில் மாற்றமில்லையென தேர்தல்கள்

06

# நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படக் கூடாது

### சரியான தலைவர் நியமிக்கப்படவேண்டும்



ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படாமல் அந்த பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமித்து பாராளுமன்றத்திலுள்ள திருடர்களை அகற்றி ஊழல் நிறுவனங்களை சுத்தப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி வேட்பாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்துள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ருவன்வெலிசேய தாதுகோபுரத்தை தரிசனம் செய்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு

06

### மன்னாரில் இளம் தாய் மரணம்

# வைத்தியர் ஒருவரை பணி இடைநீக்கம் செய்ய நடவடிக்கை



மன்னார் வைத்தியசாலையில் இளம் தாயின் மரணம் தொடர்பில் வைத்தியர் ஒருவரை பணி இடைநீக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான கடிதம் மத்திய சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ளமை

06

# எரிபொருள், மின் கட்டணம் குறையும் வறியோருக்கு ரூ. 10,000 கொடுப்பனவு

### தேசிய மக்கள் சக்தி அரசில் முன்னெடுப்பு



தமது ஆட்சியில் எரிபொருள் மற்றும் மின்சார கட்டணங்களை குறைப்பதுடன், வறியவர்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபா வழங்கப்படுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு

06

# நகர்வலம்



# இலங்கை மக்கள் தமது சக்திக்கு அப்பால் எமது நாட்டுக்கு ஆதரவளித்தார்கள்

## முஸ்லிம் லீக்கின் பிரியாவிடை நிகழ்வில் பலஸ்தீன் தூதுவர்



**(கொழும்பு தினகரன் நிருபர்)**

10 வருட காலம் இலங்கையில் பணியாற்றி பிரியாவிடை பெற்றுச் செல்லும் இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவரை கௌரவிக்கும் முகமாக அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தினால் கடந்த திங்கட்கிழமை (19) கொழும்பு மெண்டரினா ஹோட்டலில் பிரியாவிடை நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வினை இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கம், உலகளாவிய நீதிக்கான ஊடகவியலாளர் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கைக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்துவதில் இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர் சுஹைர் எம். எச் செய்த் வழங்கிய பங்களிப்புக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் தேசியத் தலைவர் ஷாம் நவாஸ் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மேலும் இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கத்தின் இணைத் தலைவர் பிமல் ரத்நாயக்க மற்றும் உலகளாவிய நீதிக்கான இலங்கை ஊடகவியலாளர் சங்கத்தின் உதவித் தலைவர் மஹிந்த ஹத்தக ஆகியோர் தூதுவரின் பணிகளை பாராட்டி உரையாற்றினர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம், இலங்கை பலஸ்தீன நட்புறவுச் சங்கம், உலகளாவிய நீதிக்கான ஊடகவியலாளர் சங்கம், பேருவளை அப்ரார் நிலையம், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் ஆகியவற்றினால் தூதுவருக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், என். எம். அமீன், சட்டத்தரணி என்.எம். சஹீட், சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம் சுஹைர், பலஸ்தீன தூதரக அதிகாரிகள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அங்கத்தவர்கள், தேசிய ஷூரா சபை அங்கத்தவர்கள் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

### மட்டு மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பிரதிநிதியாக

# என்டன் ரஞ்சித் ஆண்டகை பரிசுத்த பாப்பரசரால் நியமனம்



மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் அப்போஸ்தலிக்க பிரதிநிதியாக கொழும்பு உயர்மறை மாவட்டத் துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகை பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் பதவி விலகலை பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மறை மாவட்டத்தின் துணை ஆயரான என்டன் ரஞ்சித் ஆண்டகை கொழும்பு மருதானை புனித சூசையப்பர் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபராக கடமையாற்றியதுடன் கத்தோலிக்கத் திருச்சபையில் பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார்.



"அந்த கல்முனைக்குடி நாட்கள்" எனும் கவிதை நூலின் பிரதியை, உலக தமிழ்ச் சங்கங்களின் சங்கமம் மற்றும் சென்னை தமிழ்ச் சங்கம் என்பவற்றின் தலைவரான டாக்டர் இளங்கோவனிடம் நூலாசிரியரும் கவிஞரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் அண்மையில் சென்னையில் வைத்துக் கையளித்தார்.மேலும், சென்னையிலுள்ள நூலகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கெனவும் இவரிடம் இந்நூலின் 75 பிரதிகள் கையளிக்கப்பட்டன. எதிர்வரும் நாட்களில், இந்நூலின் அறிமுக விழாவையும், கருத்தாடல்களையும், சென்னையில் நடத்துவதற்கும் டாக்டர் இளங்கோவன், நூலாசிரியர் நிஸாம் காரியப்பருக்கு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# 'ரோட்ராக்ட்' கழகத்தின் 51ஆவது வருட மாநாடு

**ருஸைக் பாரூக்**



கொழும்பு மேற்கு 'ரோட்ராக்ட்' கழகத்தின் 51ஆவது வருட மாநாடு கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வு கழக வரலாற்றின் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை பதியவைத்தது.

இவ்விழாவில் பிரதம விருந்தினர் ரோட்டரி கழகத்தின் இளைஞர் சேவை ஆலோசகர் தினுஷா கமகே பிரதம அதிதியாகவும் மற்றும் கௌரவ அதிதியாக பர்சானா கானும் கலந்துகொண்டனர்.

2024/2025 ஆண்டிற்கான புதிய தலைவர் யாசிர் நஸ்ரி மற்றும் அவரது குழுவினர் கழகத்தின் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்ச்சியில் திட்டத் தலைவர் அமான் சாஹித்துக்கு புதிய தலைவர் யாசிர் நஸ்ரி சேவை பாராட்டு வழங்கினார்.

### அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட

# இந்திய மீனவர்கள் 22 பேருக்கும் செப். 03 வரை விளக்கமறியல்

## புத்தளம் மாவட்ட நீதவான் உத்தரவு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதவான் (20) உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு படகுகளில் தமிழகம் – தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இந்திய மீனவர்கள் 22 பேரும் எல்லை தாண்டி புத்தளம் கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடியில். ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த 5 ஆம் திகதி இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறு கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். சட்டவிரோதமாக இலங்கை எல்லைக்குள் நுழைந்தமை தொடர்பில் இந்த 22 இந்திய மீனவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விமானப்படையின் 'எரோ பேஸ்' 2024 கண்காட்சி திருகோணமலையில்

திருகோணமலை சீனக்குடா விமானப்படை கல்விப் பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எரோ பேஸ் "Aero Bash" 2024 நிகழ்வுகள் இன்று 22 தொடக்கம் 26ம் திகதி வரை சீனக்குடா விமானப்படை வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

"Aero Bash" 2024 கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியில் இலங்கை அரச பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக் கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபார மற்றும் தொழில்நுட்ப கூடாரங்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்த கண்காட்சியில் இலங்கை விமான படையின் விமான சாகசங்கள், விமானப்படை பரசூட் வீரர்களின் பரசூட் சாகசங்கள், விமானப்படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்வுகள், விமானப்படை மீட்பு குழுவினரின் விசேட மீட்பு நடவடிக்கை தொடர்பான காட்சிகள் மற்றும் அங்கம்புர மற்றும் தற்காப்பு கலை காட்சிகள், விமானப்படை பேண்ட மற்றும் அணிவகுப்பு குழுவினரின் விசேட காட்சிகள், இரவு நேர இசை நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இந்த நிகழ்வில் உள்ளடங்குகின்றன.

இந்த நிகழ்வில் விசேடமாக இலங்கையின் முதல் முறையாக கிழக்கு மாகாணத்தில் டெண்டம் ஜம்ப் சாகச நிகழ்வும் இடம்பெறவுள்ளது, இதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு புதிய அனுபவத்தை பெற முடியும்.

# சிறைக்கைதிகள் மறுவாழ்வுக்கான திறன் விருத்தி பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாண சிறைச்சாலை கைதிகளுக்கான திறன் விருத்தி பயிற்சிக்கான வாய்ப்பு சிறைச்சாலை அத்தியட்சகரின் ஆதரவுடன் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA) மற்றும் Ratnam FoundationUK ஆகிய நிறுவனங்களின் நிதி ஆதரவுடன் தேசிய தொழிற்பயிற்ச்சி நிறுவன வளவாளர்களின் பங்களிப்போடு (17) மறுவாழ்வுக்கான திறன் விருத்தி பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வை Ratnam Foundation ஸ்தாபகர் Dr நித்தியானந்தன் அவர்தம் பாரியார் திருமதி சரோஜினி நித்தியானந்தம் மற்றும் IMHO நிறுவன இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். மேலும் முன்னாள் பணிப்பாளர் திரு கிருஷ்ணகுமார், திட்ட இணைப்பாளர் துஷாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். செயற்றிட்ட தொகுதியை, பெயர்பலகையை திரைநீக்கம் செய்து ஆரம்பித்து வைத்த Dr. நித்தியானந்தன், கைதிகளும் மனிதர்கள் என்றவகையில் அவர்களுக்கான ஒரு வரப்பிரசாதம் இது எனவும் இதற்கு முழுமையாக உதவியாக செயற்பட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் உட்பட அவரது சக உதவியாளர்களும் போற்றத்தக்கவர்கள் எனக் குறிப்பிட்டார். தொடர்ந்து கைதிகளின் செயற்றிறன் காட்சிக்கூடமும் விற்பனை கூடமும் திறந்து வைக்கப்பட்டது.

# புத்தளத்தைச் சென்றடைந்த சாதனையாளர் சஹ்மி சஹீத்



கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி பேருவளையில் ஆரம்பிக்கப்பட்ட சஹ்மி சஹீதின் சாதனை நடைபயணம் 39 ஆவது நாளாக நேற்று முன்தினம் (20) புத்தளத்தைச் சென்றடைந்தது.

வில்பத்துவில் தனது 39 ஆவது நாள் பயணத்தை ஆரம்பித்த இவருக்கு வில்பத்து மக்கள், வாழ்த்தி உற்சாகமூட்டி அனுப்பியதோடு, அனுராதபுரத்தில் இவருக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை ஒன்றும் LCC LOVERS நிறுவனத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்திலிருந்து வடமத்திய, வடமேல் மாகாணங்களை சென்றடைந்த இவருக்கு அப்பிரதேச மக்களால் பெரிதும் வரவேற்பு அளிக்கப்பட்டதோடு , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி உனைஸ் பாருக் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.

இன்னும் சில நாட்களில் சொந்த ஊரான பேருவளையை சென்றடையவுள்ள சஹ்மி ஷஹீதுக்கு பேருவளை மண்ணில் பாரிய வரவேற்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக, பயணத்தின் பூரண அனுசரணையாளர், சிமி ஹோல்டிங் நிறுவன உரிமையாளர் இஜ்லான் யூசுஃப் தினகரனுக்கு தெரிவித்தார்.

# நிலவும் சீரற்ற காலநிலை தொடரும் ஏழு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் சில மாகாணங்களில் 100 மில்லி மீட்டர் மழை வீழ்ச்சி இடம்பெறும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தென்மேற்கு பகுதியில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை தொடரும் என்றும் மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கனத்த மழை பெய்யும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நுவரெலியா, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு, காலி மற்றும் மாத்தறை ஆகிய ஏழு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண் சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் களுத்துறை மாவட்டத்தின் மதுராவல, பாலிந்த நுவர, மில்லனிய, புளத்சிங்கள ஆகிய பிரதேசங்களில் வீதிகள் சில நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன் களுத்துறை மாவட்டத்தில் சில பிரதேசங்கள்,இரத்தினபுரி மாவட்டத்தின் கலவானை, எலபாத்த ஆகிய பிரதேசங்களுக்கும் தொடர்ந்து மண் சரிவு தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அத்துடன் குக்குளேகங்கை மற்றும் தெதுறுஓயா ஆறுகளின் வான்கதவுகள் தொடர்ந்தும் திறக்கப்பட்டுள்ளன.



அதேவேளை கம்பஹா மாவட்டத்தில் சில பிரதேசங்கள் தொடர்ந்தும் நீரில் மூழ்கியுள்ளன. மேல், சப்ரகமுவ,தென் மற்றும் வடமேல் மாகாணங்கள் கண்டி, நுவரெலியா, மாவட்டங்களிலும் இடைக்கிடை இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் களுகங்கையின் சிறிய ஆற்றுப்பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் குறித்த ஆற்றுப்பகுதிகள் ஊடாக பயணிக்கும் வாகன சாரதிகள் வழங்கப்படும் ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# புத்தளம் மாவட்டத்தில் 6,63,673 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி

**புத்தளம் தினகரன் நிருபர்**

2024 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 6 லட்சத்து 63,673 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரியும் மாவட்ட செயலாளருமான எச்.எம்.எஸ்.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஐந்து தேர்தல் தொகுதிகளான

புத்தளம் 1,74,159 பேரும், ஆனமடுவ 1,33,202 பேரும், சிலாபம் 1,34,178 பேரும், நாத்தாண்டியா 1,03,847 பேரும், வென்னப்புவ 1,18,286 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மேலும் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 15,270ஆகும். இதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 14,967 எனவும், 303 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். புத்தளம் மாவட்டத்தில் 470 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளதோடு வாக்கு எண்ணும் நிலையங்களாக பாத்திமா பெண்கள் பாடசாலை மற்றும் சென் அண்ட்ரூஸ் பாடசாலை என இரண்டும் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் 54 வழக்கமான வாக்கு எண்ணும் மையங்களும் 08 தபால் வாக்கு எண்ணும் மையங்களும் அமைக்கப்படவுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 22 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆவணி 06
ராகுகாலம் : பகல் : 1.35 - 3.05வரை
சுபநேரம் : காலை : 7.35 - 9.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



### தனிநபர் வருவாய் 20,000 டொலராக அதிகரிக்கும்

# 2048 க்குள் வறுமையற்ற நாடாக இலங்கை கட்டியெழுப்பப்படும்

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

2048ஆம் ஆண்டுக்குள் வறுமையற்ற நாடாக இலங்கையை கட்டியெழுப்பவும் தனிநபர் வருமானத்தை 20,000 டொலராக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அபிவிருத்தி வேலைத்திட்டத்தை தேசிய நிகழ்ச்சி நிரலாக பாராளுமன்றத்தில் சட்டமாக்கி ஜனாதிபதி தேர்தலில் அதனை முன் வைக்கும் ஒரே ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

நாட்டின் வரலாற்றில் இதுவரை காலமும் இல்லாத வகையில் அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்யும் யோசனைகளை அரசாங்கம் முன்வைத்துள்ள நிலையில் அதற்கு எதிராக செயற்பட்டு நிரந்தரமாக நாட்டை அழிவுக்குள் உட்படுத்த வேண்டாம் என்றும் அவர் சபையில் அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கலால் வரி சட்டம் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்;

"2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள இணக்கப்பாட்டுக்கு அமைய மேற்படி வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.



சம்பள முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு அனைத்து அரசாங்க சேவைக்கும் நன்மை கிட்டும் வகையில் தீர்மானங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் என்ற வகையில் டாக்டர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோருக்கு இடைக்கால கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. அரசாங்க சேவையில் நிலவும் இந்த சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக குழு ஒன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அதற்கிணங்க உதய ஆர். செனவிரத்ன தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது. அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் திருத்தம் கொண்டுவரப்பட்டு மூன்று வருடங்களில் அதனை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் போது அரசாங்க சேவையில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் 06

## பொருளாதார சுதந்திரத்தை வெற்றி கொள்ள அழைப்பு



கொள்முதல் முறைகளையும் மோசடியான அரச கொடுக்கல் வாங்கல் முறைகளையும் தவிர்த்து, ஊழலை அடியோடு இல்லாத செய்யும் பொருளாதார சுதந்திரத்தை வெற்றி கொள்ளும் பணியில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தொழில் முனைவோர் மற்றும் எதிர்காலவாதிகளின் கருத்தாய்வு மாநாட்டில் நேற்று முன்தினம் (20) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

"பொருளாதாரப் பேரழிவின் விளிம்பில் சிக்கி இருக்கின்ற நாட்டை மீட்டெடுப்பதற்கு முடியுமான ஞானமும் திறமையும் உள்ள சிறந்த குழு என்னிடம் இருக்கின்றது.

மனிதாபிமான முதலாளித்துவத்தையும், சமூக ஜனநாயகத்தையும் ஒன்றோடு ஒன்று இணைத்து ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதார மேம்பாட்டின் ஊடாக நமது நாட்டை செழிப்பான நாடாகவும், துரித பொருளாதார அபிவிருத்தியுடைய நாடாகவும் மாற்றி, அதன் பிரதிபலனின் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பகிர்ந்தளிக்கும் பொருளாதார கட்டமைப்பிற்கு இந்தக் குழுவோடு செல்ல முடியும்.

இந்த புதிய சிந்தனை சமமான வழிமுறையை பின்பற்றி நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்டுகின்ற புதிய பாதைக்கு இட்டுச் செல்லும். இதில் ஊழல் மோசடிக்கு எந்த இடமும் இல்லை.

எமது நாட்டின் எதிர்கால பொருளாதார வழிமுறைகள் பற்றிய சிநேகபூர்வ கலந்துரையாடல் மற்றும் கருத்தாடல்களில் ஈடுபட்ட எமது நாட்டின் வர்த்தகர்கள் மற்றும் வணிகத்துறையினருக்கு நன்றி தெரிவிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

### பந்துல லால் பண்டாரிகொட

## பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினராக பந்துல லால் பண்டாரிகொட நேற்று (21) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அதனையடுத்து பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றிய மனுஷ நாணயக்கார பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே பந்துல லால் பண்டாரிகொட இவ்வாறு நியமிக்கப்பட்டார்.

எட்டாவது பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினராக பந்துல லால் பண்டாரிகொட பணியாற்றியிருந்தார்.

தினகரன்

# 92

வருடங்களுக்கு முன்
### தினகரன்
### இன்று 22 ஓகஸ்ட் 1932


நாட்டுப் பொருள் விற்பனைத் திட்டம்
காற்று இயந்திரம் கண்டுபிடிக்க முயற்சி செய்யப்பட வேண்டும்
திரு. பாலசிங்கம் பகர்வது
இந்நாட்டில் குறைந்த செலவில் மின்சார சக்தி பெறலாம்.
கொழும்பு, டார்லி வீதியிலுள்ள "கேம்பிரிட்ஜ் ஹவுஸ்" என்ற மண்டபத்தில் நாட்டுப்பொருட்களை விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடந்துவரும் முயற்சிகள் சம்பந்தமாக எமது பிரதிநிதி யொருவர் திரு. க. பாலசிங்கத்தைப் பேட்டிகண்டார்.
திரு. பாலசிங்கம் கூறியதாவது:— இலங்கைப் பொருட்களையே வாங்கி உபயோகிக்கவேண்டுமென ஏற்கனவே பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தைப் பரப்பும் நோக்கத்துடன் நாட்டுப் பொருட்களுக்கு வியாபார வசதி ஏற்படுத்த வேண்டுமென நான் யோசனை கூறியிருக்கிறேன்.
இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பதற்கெனப் பிரத்தியேகமாக இடம் எதுவும் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கைப் பொருட்களை வாங்க விரும்புவோர் அவைகளை எங்கு வாங்குவதென்று அறியாமலிருக்கிறார்கள்.
கே. பாலசிங்கம்

### நாட்டுப் பொருள் விற்பனைத் திட்டம்

#### காற்று இயந்திரம் கண்டுபிடிக்க முயற்சி செய்யப்பட வேண்டும்

### திரு. பாலசிங்கம் பகர்வது

#### இந்நாட்டில் குறைந்த செலவில் மின்சார சக்தி பெறலாம்

திரு. பாலசிங்கம் கூறியதாவது: இலங்கைப் பொருட்களையே வாங்கி உபயோகிக்க வேண்டுமென ஏற்கனவே பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இந்த இயக்கத்தைப் பரப்பும் நோக்கத்துடன் நாட்டுப் பொருட்களுக்குப் வியாபார வசதி ஏற்படுத்த வேண்டுமென யோசனை கூறியிருக்கிறேன்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பதற்கெனப் பிரத்தியேகமாக இடம் எதுவும் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கைப் பொருட்களை வாங்க விரும்புவோர் அவைகளை எங்கு வாங்குவதென்று அறியாமலிருக்கிறார்கள்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

### பயிர் சேதங்களுக்கான இழப்பீடு

# 40,000 ரூபாவிலிருந்து ஒரு இலட்சமாக அதிகரிக்க அரசாங்கம் இணக்கம்

### விரைவில் அமைச்சரவையில் அனுமதி

இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பயிர் சேதங்களுக்காக அரசாங்கத்தினால் தற்போது வழங்கப்பட்டு வரும் இழப்பீட்டு தொகையை ஏக்கருக்கு 40,000 ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கான அமைச்சரவைப்பத்திரத்தை விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர சமர்ப்பித்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். இதன்படி ஒரு ஹெக்டேயருக்கு 250,000 ரூபா இழப்பீடு வழங்கப்படும்.

பொலன்னறுவை பராக்கிரம சமுத்திர வர்த்தக விவசாயிகள் அமைப்பின் உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் (20) விவசாய அமைச்சில் அமைச்சரை சந்தித்து விவசாயப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொண்டதுடன், விவசாய அமைப்பு இந்த யோசனைகளை அமைச்சரிடம் முன்வைத்தது. விவசாய அமைப்பின் கோரிக்கையை அடுத்து அமைச்சர் இந்த அமைச்சுப்பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார்.

தற்போது அதிகரித்து வரும் பயிர் சேதம் காரணமாக ஒரு ஏக்கருக்கு 40,000 ரூபா நட்டஈடு வழங்கப்பட்டு வருவதாக பொலன்னறுவை பராக்கிரம சமுத்திர விவசாயிகள் அமைப்பு அமைச்சரிடம் தெரிவித்துள்ளதுடன் வரட்சி, வெள்ளம் மற்றும் வன விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு அரசு வழங்கும் இழப்பீட்டுத் தொகை 40,000 ரூபா போதுமானதாக இல்லையென தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் மகிந்த அமரவீர,



"பயிர் சேத நட்டஈடு ஏக்கருக்கு 100,000 ரூபா வழங்குவதற்கான அமைச்சுப் பத்திரத்தை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் இந்த பருவத்தில் பெய்த கன மழையால் ஏற்பட்ட பயிர் சேதத்துக்கு உடனடியாக இழப்பீடு வழங்க வேளாண் மற்றும் உழவர் காப்பீட்டு திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் விவசாயிகளிடம் தெரிவித்தார். இறக்குமதி செய்யப்படும் விவசாய உபகரணங்களுக்கு அரசாங்கம் சுங்க வரி அறவிடுவதில்லையெனவும், அனைத்து விவசாய உபகரணங்களுக்கும் அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

## நிறைவேற்றதிகாரம் முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும்

### முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்றும் அதற்கான சூழல் தற்போது உருவாகியுள்ளதாகவும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின என சபையில் தெரிவித்த அவர், நாட்டுக்கு சுமையாக உள்ள நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். 06

### மாகாணசபை, பாராளுமன்ற தேர்தல்

## சட்டமூல பரிசீலனைக்கு உறுப்பினர்கள் நியமனம்

### சபாநாயகர் நேற்று சபையில் அறிவிப்பு



'மாகாணசபை தேர்தல்கள் (திருத்தம்)' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு சட்டத்தரணி கலாநிதி சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க, ஜானக வக்கும்புர, சாமர சம்பத் தசநாயக, சட்டத்தரணி சந்திம வீரக்கொடி, மனோ கணேசன், 06

## Dialog MyOffer தனிப்பட்ட பயனர் அனுபவத்திற்காக செயற்கை நுண்ணறிவு மூலம் வலுவூட்டப்பட்ட சலுகைகளை அளிக்கிறது

இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, தனது MyOffer சேவையின் குறிப்பிடத்தக்க மேம்படுத்தலை அறிவித்துள்ளது. இந்த வெகுமதித்தளமானது சந்தாதாரர்களுக்கு பிரத்தியேக சலுகைகளையும் அனுகூலங்களையும் அளிக்கும்பொருட்டு வெளியிடப்பட்டது. இப்போது flash offers மற்றும் பிரசித்தி பெற்ற Blaster Planகளுக்கான சலுகைகள் ஆகிய அம்சங்களை கொண்டு வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் சிறந்த மதிப்பை அளிக்கும் நோக்குடன் இயங்கவுள்ளது. இந்த மேம்பாடு தொலைத்தொடர்பு துறையில் புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் மைய தீர்வுகளை அளிக்க டயலொக் காட்டும் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் மூலம் வாடிக்கையாளர்களின் மாறுபட்ட தேவைகளுக்கு தீர்வளிக்கிறது.

ஏற்கனவே இருக்கும் call மற்றும் data offerகளுடன், டயலொக் மொபைல் வாடிக்கையாளர்கள் இப்போது நாளாந்தம் புதுப்பிக்கப்படும் flash offersஐ பெற்றுக்கொள்ள முடியும். இது தனிப்பட்ட data planகளை அளிக்கும். இதனுடன் Unlimited Blaster, Fun Blaster, Call Blaster மற்றும் Triple Blaster ஆகிய பிரபல Blaster Planகளுக்கும் கவர்ச்சிகரமான சலுகைகள் உள்ளன.

மேலும், Dialog Home Broadband வாடிக்கையாளர்களுக்கு தமது WiFi planகளுக்கு மேலதிகமாக பிரத்தியேக data சலுகைகளை பெற்றுகொள்ள முடியும். இந்த முன்னெடுப்பு, வாடிக்கையாளர்களின் அனுபவங்களை மேம்படுத்தும் நோக்கில் டயலொக் தொடர்ந்து காட்டும் அர்ப்பணிப்பின் ஒரு முக்கியமான அங்கமாகும்.

வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தேவைகளை புரிந்து கொண்டு அவற்றுக்கு தீர்வளிக்கும் வகையில் தனிப்பட வடிவமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தீர்வுகளை வழங்குவதில் டயலொக் எடுக்கும் முன்னேற்றகரமான அணுகுமுறையை இந்த மேம்பாடுகள் காட்டுகின்றன. MyOfferஇன் சேவைகளும் சலுகைகளும் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவைகள் மற்றும் அவர்களின் தற்போதைய Recharge வழக்கங்களை கருத்தில் கொண்டு கவனமாக உருவாக்கப்பட்டுள்ளன.சலுகைகளை பார்க்கவும், பயன்படுத்தவும் சந்தாதாரர்கள் MyDialog Appஐ பயன்படுத்தலாம் அல்லது அவர்களது அருகிலுள்ள சில்லறை விற்பனையாளரை நாடலாம்.

சில்லறை விற்பனையாளர்கள் Retailer Hub Appஐ பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு உரிய சலுகைகளை வழங்க முடியும்.

இந்த புதிய அம்சங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், Dialog புதிய தொழில்நுட்பத்துடன் சந்தையில் முன்னணி இடத்தை வகிக்கிறது, இணைப்பின் மற்றும் விலையின் மலிவுத்தன்மை இரண்டையும் ஒருசேர மேம்படுத்தி அளிக்கிறது.

இந்த மேம்பாடுகள், வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளையும் மீறி அவர்களை திருப்திப்படுத்த நிறுவனம் காட்டும் அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்துகின்றன. மேலும் தகவல்களுக்கு, www.dialog.lk ஐப் பார்வையிடவும்.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 15

### குறள் தரும் சிந்தனை

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்துதொழுகு வார்

நம்பி பழகியவர் வீட்டில், அவரது மனைவியிடம் தகாத செயலில் ஈடுபட முனைகிறவன், உயிர் இருந்தும் பிணத்திற்கு ஒப்பானவனேயாவான்.

# வாக்களிப்பு முறைமையில் தெளிவு ஏற்படுவது அவசியம்

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இரண்டு கோடி 20 இலட்சம் மக்களைக் கொண்ட இந்நாட்டில் 2024 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் ஒரு கோடி 71 இலட்சத்து 80 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதோடு, 39 பேர் அபேட்சகர்களாக இத்தேர்தலில் களமிறங்கியுள்ளனர். அந்த வகையில் இத்தேர்தலுக்கான ஏற்பாடுகளை விரிவான முறையில் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய வாக்கெடுப்பினை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கட்டளைகள் வர்த்தமானியில் கடந்த ஜுலை மாதம் 26 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. அந்தத் தினத்தில் இருந்து பத்து நாட்களுக்குள் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும். அதற்கேற்ப கடந்த ஓகஸ்ட் 05 ஆம் திகதி வரை தபால் மூலம் வாக்களிப்பதற்காக 7 இலட்சத்து 36 ஆயிரத்து 589 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 7 இலட்சத்து 12 ஆயிரத்து 321 பேர் தகுதி பெற்றுள்ளனர். இத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தவர்களில் 24, 260 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட தேர்தல்கள் ஆணைக்குழு நடத்தும் எல்லா தேர்தல்களிலும் தபால் மூலம் வாக்களிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணங்கள் கோரப்படுவது வழமையாகும். அதாவது தேர்தல் வாக்களிப்பு இடம்பெறும் தினத்திலும் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணியிலும் ஈடுபடும் அரசாங்க உத்தியோகத்தர்கள் முன்கூட்டியே தங்களது ஜனநாயக உரிமையான வாக்கைப் பதிவு செய்யும் வகையில் இந்த ஏற்பாடு தேர்தல்கள் சட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களில் குறிப்பிடத்தக்க அளவிலானோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களிலேயே இவ்வளவு தொகை நிராகரிப்பு பதிவாகி இருக்கின்றது என்றால், வாக்களிப்பிலும் நிராகரிப்பு பதிவாகவே செய்யும். கடந்த காலங்களிலும் தேர்தல்களின் போது அளிக்கப்படும் வாக்குகளில் நிராகரிக்கப்படும் வாக்குகள் குறிப்பிடத்தக்களவில் பதிவாவது வழமையாகும். அதனால் இத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களில் குறிப்பிடத்தக்களவிலானவை நிராகரிக்கப்பட்டிருப்பது பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

இவ்வளவு தொகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதை சாதாரண விடயமாக நோக்க முடியாது. ஏனெனில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பவர்கள் கல்வியைப் பெற்றவர்கள் மாத்திரமல்லாமல், அரச உத்தியோகத்தர்களும் கூட. அவ்வாறானவர்களின் விண்ணப்பங்களே நிராகரிக்கப்படுவது அதிகமாகக் காணப்படுகின்றது என்றால் சாதாரண மக்களது வாக்களிப்பிலும் நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அமையக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

கடந்த காலங்களிலும் ஒவ்வொரு தேர்தலிலும் நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து காணப்பட்டுள்ளது. இது பரவலாக அவதானிக்கப்படும் விடயமாக உள்ளது. இது ஆரோக்கியமானதல்ல. அதனால் வாக்களிக்கும் முறைமை குறித்து மக்களுக்கு தெளிவையும் அவர்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவது அவசியம். தேர்தல்கள் கண்காணிப்புக் குழுக்களும் இது தொடர்பில் சுட்டுக்காட்டியுள்ளன.

அதேநேரம் இத்தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களுக்கான வாக்களிப்பு எதிர்வரும் 4 ஆம், 5 ஆம், 6 ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளது. அத்தினங்களில் வாக்களிக்க முடியாத நிலைக்கு உள்ளாகின்றவர்கள் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் வாக்களிக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்களிப்பின் நிமித்தம் வாக்குச் சீட்டுக்கள் அந்தந்த நிறுவனங்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்படவிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

அதனால் அளிக்கப்படும் வாக்குகள் நிராகரிக்கப்படுவதைக் குறைத்து தவிர்ப்பதற்கு ஏற்ப வாக்காளர்கள் மத்தியில் தெளிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக வெகுஜன ஊடகங்கள் இது குறித்து கூடுதல் கவனம் செலுத்துவது பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும். வாக்களிக்கும் முறைமை குறித்து வாக்காளர் மத்தியில் போதிய தெளிவு ஏற்படும் போது நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைத்து தவிர்க்கக் கூடியதாக இருக்கும். அது நாட்டின் தேர்தல் ஜனநாயகத்தை வலுப்படுத்த பக்கத்துணையாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு பழனியில் நாளைமறுதினம் ஆரம்பம்

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் பங்கேற்கிறார்

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு_ 2024 இரண்டு நாள் நிகழ்வாக எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் அருள்மிகு பழனி ஆண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

'உலகின் முதல் மொழி தமிழ். மூத்த இனம் தமிழர் என்பது வரலாற்றுப் பேருண்மை. தமிழர் மெய்யியல் உணர்வில் முகிழ்த்த அழகுணர்வு 'முருகு' என்று தொல் தமிழ் இலக்கியங்கள் முழங்குகின்றன. இந்தப் பண்பாட்டை பறைசாற்றும் வகையில் பாரெங்கும் வாழும் பைந்தமிழர்களை இணைத்து அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை நடத்துவது குறித்து மகிழ்ச்சி. தமிழினத்தின் தனிச் சிறப்பை நிலைநிறுத்தும் வகையில் மாநாடு வெற்றியுடன் நடைபெற வாழ்த்துகிறேன். அன்பால் உயிர்கள் ஒன்றாகும், அறத்தால் உலகம் நன்றாகும்' என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு. க .ஸ்டாலின் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின்

இம்மாநாடு சிறப்புற தமிழ்க் கடவுளாகிய திருமுருகனின் வழிபாடு, தமிழர் பண்பாட்டோடும் வாழ்வோடும் இரண்டறக் கலந்து தமிழர்களின் தனித்த அடையாளமாகத் திகழ்கிறது. இதனை அனைவரும் அறியும் வகையிலும் பல்வேறு தேசங்களில் மக்கள் உணர்வில் பொழியும் முருக வழிபாட்டை உணர்த்தும் வகையிலும் இம்மாநாடு நடைபெறுகிறது. இந்த மரபு வழி தொடர்ச்சியை மீட்டெடுக்கும் நோக்கில் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மாநாட்டினை முருகனும் முருகனடியார்களும் உள்ளம் குளிர வரலாற்றில் இடம்பெறும் வகையில் மருள்தரும் அறுபடை முருகனின் மூலவர் காட்சிகள், பார்ப்பவர்கள் பரவசம் அடையும் மெய்நிகர் காட்சிகள், முப்பரிமாண பாடல் அரங்கம் மற்றும் ஆய்வரங்கம் போன்ற முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு 2024 இன் தொடக்கவிழா ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி தலைமையில் நடைபெறுகிறது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ. பி.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.







ஐ.பெரியசாமி



பி.என்.ஸ்ரீதர்



பி.கே.சேகர்பாபு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசியா தொழில் முனைவோர் கூட்டுறவு துணை அமைச்சர் ஓ. பி. டத்தோ ரமணன் ராமகிருஷ்ணன், இங்கிலாந்து இப்ஸ்விச் மேயர் இளங்கோ கே. இளவழகன், மலேசியா சிலாங்கூர் மாநில செயற்குழு உறுப்பினர் டி.எச். பாப்பாராய்டு வேரமண், தென்னாபிரிக்கா மாகாண சட்ட அவை உறுப்பினர் லெஸ் கவண்டர், மலக்கா மாநில செயற்குழு உறுப்பினர் வி. பி. சண்முகம், சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆர். சுப்பிரமணியன், ஆர். சுரேஷ் குமார், பி. வேல்முருகன், பி. புகழேந்தி, வி. சிவஞானம், அரசு முதன்மை செயலர் டொக்டர் பி. சுந்தரமோகன், இலங்கை, இந்து கலாசார அலுவல்கள் பணி ப்பாளர் அனிருத்தனன் மற்றும் மலையக நூலக பதிப்பாசிரியர் எச்.எச். விக்கிரமசிங்க ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து இரு நாட்களும் பல்வேறு அரங்கங்களில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அருணகிரிநாதர் அரங்கம் 24. 8. 2024 முதல் நாள் நிகழ்வாக காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும்.

மாநாட்டு விழா மலர் வெளியீட்டுடன் நீதியரசர்கள் ஆர் .சுப்பிரமணியன், பி .புகழேந்தி, பி. சிவஞானம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். பி .என். ஸ்ரீதர் (ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை) நன்றியுரையாற்றுவார். தொடர்ந்து 24 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை முழுநாள் விழாவாக நடைபெறும்.

இலங்கையிலிருந்து திருமதி.வீ. ஆர் .வயலட், ஏ லட்சுமணன், வி ராமர், திருமதி பி .இளங்கோ, வி துலாஞ்சனன், டொக்டர் எஸ் .ஸ்ரீகாந்தன், டொக்டர். எஸ் கேசவன்,எஸ். கந்தசத்யதாசன் ஆகியோர் ஆய்வரங்கில் கலந்து கொண்டு கட்டுரை சமர்ப்பிக்கவுள்ளனர்.



எச்.எச்.விக்கிரமசிங்க

# சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக அறுகம்பையில் மரதன் ஓட்டப்போட்டி

அம்பாறை மாவட்டம் பொத்துவில் அறுகம்பை சுற்றுலாப் பிரதேசத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுகிறது. உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும், சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் அறுகம்பை அபிவிருத்தி போரம் வருடாவருடம் அறுகம்பை அரை மரதன் ஓட்டப் போட்டியினை நடத்தி வருகிறது. அதனடிப்படையில் இம்முறை அறுகம்பை அபிவிருத்தி போரம் ஏற்பாடு செய்து நடாத்திய அரை மரதன் ஓட்டப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

குறித்த அரை மரதன் ஓட்டப்போட்டியின் 21.1கிலோமீற்றர் போட்டியில் ஆண்கள் பிரிவில் அவிசாவளையை சேர்ந்த விமல் காரியவசம் முதலாமிடத்தினையும், வெலிமடையைச் சேர்ந்த ரீ.டபிள்யூ.ரத்னபால இரண்டாமிடத்தினையும், டென்மார்க்கை சேர்ந்த பெஸ்டியன் குலோஸ்கோ மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டார்.

பெண்கள் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த அனிக்கா பேலிம் முதலாமிடத்தினையும், ஜேர்மனியை சேர்ந்த டீ.அனிக்கா டோன் இரண்டாமிடத்தினையும், அவுஸ்திரேலியாவை சேர்ந்த சஸாலி மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார்.

இந்த மரதன் ஓட்டப் போட்டியானது 21.1 கிலோமீற்றர் அரை மரதன், 10கிலோமீற்றர் மற்றும் 5கிலோமீற்றர் என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றது. 5கிலோமீற்றர் போட்டியில் சிறுவர்கள் மற்றும் வயதானோர் மாத்திரம் கலந்துகொண்டனர். ஏனைய இரு பிரிவுகளிலும் பிரபல மரதன் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.







இதன்போது 10கிலோமீற்றர் மரதன் போட்டியின் ஆண்கள் பிரிவில் வெலிமடையை சேர்ந்த டீ.எம்.எரந்த தென்னகோன் முதலாமிடத்தினையும், மகியங்கணையை சேர்ந்த கே.எம்.சரத்குமார் இரண்டாமிடத்தினையும், நுவரெலியாவை சேர்ந்த எம்.சௌந்தரராஜன் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள்.

பெண்கள் பிரிவில் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த பெல்லா றுஸல் முதலாமிடத்தினையும், றீஸ்கா கிஸ்ஜெஸ் இரண்டாமிடத்தினையும், இஸ்ரேல் நாட்டை சேர்ந்த டெஃப்னா டென்போமா மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள்.

சிறுவர்களுக்கான 5கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டியில் பொத்துவில் பிரதேசத்தை சேர்ந்தவர்களான கே.றினோஸ் முதலாமிடத்தினையும், எம்.ரீ.எம்.இன்ஷாப் இரண்டாமிடத்தினையும், என்.அனீஸ் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர். வயதானோருக்கான 5கிலோமீற்றர் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஏ.எஸ்.மொஹானி முதலாமிடத்தினையும், மொனிசா டில்சான் இரண்டாமிடத்தினையும், தோமஸ் பீபர் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டார்கள்.

பெண்கள் பிரிவு போட்டியில் அலன் கோல்ப் முதலாமிடத்தினையும், ரைகா வேன்டியர் ஸ்ட்ரியட்டர் இரண்டாமிடத்தினையும், லரீசா பலஸ் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டார்கள்.

இப்போட்டிகளில் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு பணப் பரிசில்களுடன் பதக்கம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அறுகம்பை அபிவிருத்தி போரத்தின் தலைவர் இஸட்.எம்.ஹாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகவும், இராணுவத்தின் 242வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் களன அமுனுபுர, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் உவைஸ் பாறுக், பெடிவே உல்லாச விடுதியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் பீ.சப்றாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

ஆதம் லெப்பை றியாஸ்
(பாலமுனை விசேட நிருபர்)

# ஆப்கானிஸ்தானில் தீவிரமடையும் தலிபான்களின் சட்டதிட்டங்கள்!

ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்களால் 13,000 இற்கும் மேற்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆப்கான் அரசு அறிவித்திருக்கிறது. அந்நாட்டின் கடும்போக்கு சட்டவிதிகளை மீறியதற்காகவே இந்நடவடிக்கையை தலிபான்கள் மேற்கொண்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கு கடும் கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்து வருகிறார்கள்.. பெண்கள் வேலைக்கு செல்லக்கூடாது. தனியாக வெளியே நடமாடக் கூடாது, அப்படியே வெளியே வந்தாலும், வீட்டு ஆண்களின் துணையுடன்தான் வர வேண்டும் போன்ற கடுமையான சட்டங்களை அவர்கள் விதித்துள்ளனர்.

மாணவிகளுக்கு உயர்நிலை பாடசாலைகளில் அனுமதி மறுப்பு, தொடக்கப் பாடசாலைகளில் மாணவ மாணவிகளுக்கு தனித்தனியாக வகுப்புகள் என பல்வேறு கட்டுப்பாடுகள் அங்கு விதிக்கப்பட்டுள்ளன. பூங்காக்களிலும் ஆண்கள், பெண்கள் தனித்தனியே செல்ல வேண்டும், அதாவது,



வாரத்தின் 3 நாட்கள் பெண்களும், வார இறுதி நாட்கள் உள்பட 4 நாட்கள் ஆண்களும் பூங்காக்களுக்கு செல்லலாம்.

திருமணமான தம்பதிகள் ஒரே குடும்பத்தினராக இருந்தாலும் அவர்கள் சேர்ந்து பூங்காவுக்குச் செல்ல முடியாது.

அதேபோல, ஆண் டொக்டர்களிடம் பெ ண்கள் சிகிச்சைக்செ் செல்லக்கூடாது என்று தலிபான்களின் கட்டுப்பாடுகள் நீண்டு கொண்டே செல்கின்றன. விமானப் பயணங்களிலும் ஆண்கள், பெண்கள் தனித்தனியாக பயணம் மேற்கொள்ள வேண்டும்.




# கண்டி எசல பெரஹறாவை முன்னிட்டு முத்திரை வெளியீடு






கண்டி தலதா மாளிகையின் வரலாற்று சிறப்புமிக்க பெரஹறாவை அடையாளப்படுத்தும் வகையில் அதன் கலாசாரத்தை உள்ளடக்கிய தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட முதல் நாள் ஞாபகார்த்த உரையை அமைச்சர் பந்துல குணவர்த்தன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உத்தியோகபூர்வமாக (20) கண்டி ஜனாதிபதி காரியாலயத்தில் வைத்து கையளித்தார். இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னகோன், சிரேஷ்ட பிரதி தபால்மா அதிபர் கே.ரணசிங்கவும் கலந்து கொண்டார்.

# கட்சி, நிற வேறுபாடு இன்றி மீண்டும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க

**(காவத்தை தினகரன் விசேட நிருபர்)**



கட்சி நிற வேறுபாடு இன்றி மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு அனைவரும் ஒன்றுசேருமாறு ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையின் பொருளாதாரம் கடந்த காலத்தில் எப்படி இருந்தது, அஸ்வெசும முறை வறுமையை ஒழிப்பதற்கு எவ்வாறு ஆதரவளித்தது மற்றும் நாட்டின் பணவீக்கத்தின் முந்தைய நிலைமை எப்படி இருந்தது, தற்போதைய நிலைமை எப்படி இருக்கிறது என்பதை கருத்திற் கொண்டு கட்சி நிற வேறுபாடு இன்றி மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு அனைவரும் ஒன்றுசேருமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

1956ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக கட்சி, நிற பேதமின்றி அனைவரும் ஒரே இலக்குடன் மீண்டும் இணைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்த போது, நாட்டை மீண்டும் இயல்புநிலைக்கு கொண்டு வந்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தனி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்து ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவே.

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ரணில் விக்கிரமசிங்கவே ஏற்க வேண்டும் என்று முதலில் பரிந்துரைத்தவர் ஆளுநர் நவீன் திசாநாயக்க. அன்று அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்காவிட்டிருந்தால் நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி நிலை தலைகீழாக மாறியிருக்கும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜிக விக்கிரமசிங்க, உதயகாந்த குணதிலக்க, சுதத் மஞ்சுள மற்றும் கேகாலை மாவட்ட அரசியல் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# புதைக்கப்பட்ட பெண்ணின் சடலம் தோண்டியெடுப்பு

மந்தாரம்நுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோனப்பிட்டிய சீனாக்கொலை தோட்டத்தில் புதைக்கப்பட்ட பெண்ணொருவரின் சடலத்தை தோண்டியெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை தோண்டியெடுக்கும் நடவடிக்கைகள் பொலிஸார் உள்ளிட்ட சட்ட குழுவினர் தலைமையில் நேற்று இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரப்பத்தனை ஹோல்புரூக் பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றிய தாதியொருவரின் சடலமே இவ்வாறு தோண்டியெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரை கடந்த ஆறு மாதங்களாக காணவில்லையென மந்தாரம்நுவர பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் கோனப்பிட்டிய சீனாக்கொலை தோட்டப்பகுதியில் இவர் புதைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும் இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே சடலத்தை தோண்டியெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக வலப்பனை நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய சடலை தோண்டியெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது, இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட இரசாயன தடயவியல் புலனாய்வு பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளதாக மந்தாரநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

(ரமேஷ்)

# மாணவத்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

**(அக்குறணை குறூப் நிருபர்)**



நூற்றாண்டு காலம் பழமைவாய்ந்த பொரமடுல்ல வித்தியாகர வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்கள் 64 பேருக்கு பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே கலந்து கொண்டார்.

1827ஆம் ஆண்டு 12 மாணவர்களுடனும் 3 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அன்று பொரமடுல்ல கனிஷ்ட வித்தியாலயமாகக் காணப்பட்டது. 2005ஆம் ஆண்டு இது மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது தரம் 1 தொடக்கம் 13 வரை சகல கல்விப்பிரிவுகளையும் கொண்ட ஒரு மகா வித்தியாலயமாக இது திகழ்கின்றது.



கொழும்பில் இயங்கும் ஜோசப் வாஸ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் கொழும்பு சுகததாச வெளியரங்கில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து சிறப்பித்தார்.

# சிவில் சமூக செயற்பாட்டாளர்களை அறிவுறுத்தும் இரண்டு நாள் வதிவிட செயலமர்வு



**(புசல்லாவை தினகரன் நிருபர்)**

மனித உரிமைகள் தொடர்பாக சிவில் சமூக செயற்பாட்டாளர்களை அறிவுறுத்தும் இரண்டு நாள் வதிவிட செயலமர்வு கண்டி ரோயல் Kandian ஹோட்டல் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது திருகோணமலை மாவட்ட மனித உரிமை ஆணையாளர் அருள் சிவஞானம் விளக்கவுரையாற்றினார். இந்நிகழ்வை கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் புசல்லாவை, நாவலப்பிட்டி, பன்விலை பிரதேசங்களைச் சேர்ந்த சிவில் சமூக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# குவைத் நிதியில் அல்ஹிஜ்ரா வித்தியாலயத்தில் புதிய வகுப்பறை கட்டடம் திறந்து வைப்பு









**(அஷ்ரப் ஏ சமத்)**

தம்பதெனிய அல் ஹிஜ்ரா வித்தியாலயத்தில் குவைத் நாட்டின் இலங்கை தூதுவர் காலிப் எம்.எம். புதைரின் வேண்டுகோளின் பேரில் குவைத் பரோபகாரியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை கட்டிடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.மேற்படி வகுப்பறை கட்டிடம் இலங்கையின் அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ்வின் சிபார்சின்பேரில் இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

கல்லூரி அதிபர் கலாநிதி எம்.எஸ்.எப் சிபானா தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக ஜாமிஆ நளீமியா கலாபீடத்தின் முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் கலந்து சிறப்பித்தார். அத்துடன் குவைத் தூதுவராலயத்தின் அதிகாரி அஷ்ஷெய்க் எம். பிர்தவ்ஸ் (நளீமி), அல்ஹிமா பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இக் கல்லூரியின் 75ஆவது பவள விழா நிகழ்வின்போது இக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரி அதிபர் தனது உரையில், தம்பதெனியா அல் ஹிஜ்ரா பாடசாலை 75 ஆண்டுகளை பூரணப்படுத்தியும் பௌதீக வளம் குறைந்ததொரு பாடசாலையாக காணப்பட்டு வருகின்றது. இத்தருணத்தில் அல்ஹிமா அமைப்பின் ஏற்பாட்டில் இவ்வாறானதொரு கட்டிடம் கிடைக்க பெற்றதையடுத்து இப்பிரதேச வாழ் மக்கள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இதற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர்.

### பர்மா – இலங்கை சமய, கலாச்சார தொடர்பின் அடையாளம்

# நூற்றாண்டை கொண்டாடும் தெமட்டகொடை மகுடாராம விஹாரையில் அமைச்சர் பந்துல





கொழும்பு, தெமட்டகொடை மகுடாராம மியன்மார் பௌத்த விகாரையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கொண்டாட்ட நிகழ்வு மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினர் தலைமையில் நடைபெற்றதுடன் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார்.

பாரம்பரிய சமய வழிபாடுகள் மகா சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பின்னர், இலங்கை சார்பாக நிகழ்ச்சிக்கு வாழ்த்து தெரிவித்த அமைச்சர்,

“மகுடாராம மியன்மார் பௌத்த விகாரையின் நூற்றாண்டு விழாவுக்கு என்னை அழைத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் எனது மரியாதைக்குரிய நன்றிகள். அதி வணக்கத்துக்குரிய வினயாலங்கார தேரரால் 1924 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விகாரையின் வரலாற்றில் இந்த நூற்றாண்டு நிகழ்வு விசேட சந்தர்ப்பமாகும எனவும் தெரிவித்தார்.

## தலதா ஐ.ம.ச. எம்.பி...

"எனது சகோதரன் காமினி அத்துகோரளவின் மறைவுக்குப் பின்னர் 2004ஆம் ஆண்டு நான் பாராளுமன்றத்துக்கு வந்தேன். எனது சகோதரன் ஐக்கிய தேசிய கட்சிக்காக பல அர்ப்பணிப்புகளை செய்து அதனை பாதுகாத்து வந்தார்.

எந்த சந்தர்ப்பத்திலும் கட்சியை விட்டு பிரிந்து செல்ல தீர்மானிக்கவில்லை. நானும் அவ்வாறே இந்த கட்சிக்காக பாடுபட்டு வந்தேன்.

எனினும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கட்சிக்குள் ஏற்பட்ட உள்ளக முரண்பாடுகள் காரணமாக 2020 பொதுத் தேர்தலுடன் கட்சி பிளவுபட்டது.

## அரசாங்க ஊழியர்களுக்கு 25,000 ரூபா...

இந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அதனை பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அமைச்சரவை அனுமதியும் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

எவரும் கூறுவது போல் இதில் எந்த அரசியலும் கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். கலால் வரி கட்டளைச் சட்டம் மற்றும் கொழும்பு துறைமுக நகரம் ஆகியன தொடர்பான கட்டளைச் சட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்

"எதிர்காலத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். அது தேர்தல் வாக்குறுதியா என்றும் அவர்கள் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

நாம் 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாட்டிலுள்ள 13 இலட்சத்து 80,000 அரசாங்க ஊழியர்களுக்கும் 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கினோம்.

ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவுகளையும் அதிகரித்தோம். அவர்களுக்கு மேலும் 3,000 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அரசாங்கத்தின் திட்டங்கள் மூலமான நடவடிக்கைகள். நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை மேற்கொண்டார்.

நாட்டு மக்களின் வாழ்வாதார நெருக்கடியை நாம் உணர்ந்து கொண்டுள்ளோம். வரிச்சுமையும் காணப்படுவதால் வரிகளை குறைக்க வேண்டியுள்ளது. முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதனை மேற்கொள்வது அவசியம்.

நாட்டு மக்கள் வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு அவர்களுக்கான சக்தியை பெற்றுக்கொடுப்பது அவசியம். அதனைக் கவனத்திற்கொண்டே உதய ஆர். செனவிரத்ன குழு நியமிக்கப்பட்டது. அந்த குழுவில் எந்த அரசியல்வாதிகளும் பங்கேற்கவில்லை. நிதியமைச்சு உட்பட அரச அதிகாரிகளே இடம் பெற்றனர்.

அந்தக் குழு இடைக்கால அறிக்கையொன்றை சமர்ப்பித்தது. எதிர்காலத்தில் எவ்வாறு சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பான பரிந்துரை அதில் உள்ளடக்கப்பட்டது. அந்த இடைக்கால அறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அந்த இடைக்கால அறிக்கையில் தற்போதுள்ள அனைத்து வாழ்க்கைச் செலவு கொடுப்பனவுகளும் ஒன்றிணைக்கப்பட்டு 25,000 ரூபா வாழ்க்கை செலவு கொடுப்பனவு அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளதால் திறைசேரி 2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கி அதனை வழங்குவதற்கான முன்னோடித்திட்டங்களைமேற்கொண்டுள்ளது.

திறைசேரியின் செயலாளரும் அமர்ந்திருந்த குழுவிலேயே இந்த திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டு இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் 24% அதிகரிப்பு அடுத்த வரவு செலவு திட்டத்தில் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் முகாமைத்துவம் செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட முடிவுகளே தவிர ஜனரஞ்சக வார்த்தைகள் அல்ல.

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்தது. ஒரு பிரச்சனைக்கு தீர்வு காணும் போது மற்றொரு பிரச்சினை தலையெடுத்தது. நாம் அவை அனைத்தையும் மிகுந்த கவனத்துடன் கையாண்டோம். அதன் ஒரு அம்சமாகவே பராட்டே சட்டத்தை நாம் இடைநிறுத்தினோம்.

வாரத்திற்கு ஒரு தடவை நாட்டின் நிதி சபை, நிதி அமைச்சின் விசேட குழு ஆகியவை ஒன்று கூடி இவற்றில் அவதானம் செலுத்தியது.

வர்த்தக சமூகத்தின் நலன் கருதி சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

இத்தகைய பின்னணியில், தற்போது மேடைகளில் உரையாற்றுபவர்கள் காலையில் வரிகளை குறைக்கப் போவதாக தெரிவிக்கின்றனர் பாராட்டே சட்டத்தை இடைநிறுத்தியமை தொடர்பில் பேசுகின்றனர். இது விந்தையாகவுள்ளது" எனத் தெரிவித்தார்.

## 10 கோடி ரூபா நட்டஈட்டை...

செலுத்தி முடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர் செலுத்த வேண்டியிருந்த எஞ்சிய தொகையான (12 மில்லியன்) ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாவை அவர் இம்மாதம் 16 ஆம் திகதி செலுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேவையாயின் பாதுகாப்பான...

சுமார் 75 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தேர்தல் விதிமுறைகளை மீறினால் ...

ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல் ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலுக்கான செலவின வரம்புகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. வேட்பாளர்கள் இந்த வரம்புகளை கடைப்பிடிக்க வேண்டும். தேர்தல் நிறைவடைந்து 21 நாட்களுக்குள் தங்கள் செலவு அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்தார்.

## நிறைவேற்று அதிகாரங்கள்...

கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊழல் அரசியல் கலாசாரத்தின் விளைவுகளால் நாடு சூழப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையிலிருந்து விடுபட அனைவரும் சுதந்திரமாகவும், புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டு நாட்டை தேசிய தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள், மின் கட்டணம் குறையும்....

தெரிவித்துள்ளார். இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது, ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றியீட்டினால் ஊழல் மோசடிகள், மக்களின் பணம் களவாடுதல் நிறுத்தப்படும். ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து வறிய மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் திட்டம் எம்மிடம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கும்...

இனம், மதம் பற்றி பேசாமல் இருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அனைத்து இலங்கையர்களும் சமாதானத்துடனும் சுபீட்சத்துடனும் வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு அனைவரும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

முஸ்லிம் சமூகமாக நாம் பார்ப்பது எமக்கு அமைதி தேவை. நாட்டில் உள்ள அனைவருக்கும் அச்சமோ சந்தேகமோ இல்லாமல் வாழக்கூடிய சூழல் தேவை. வர்த்தக சமூகத்துக்கு பொருளாதாரம் மிக முக்கியமான விஷயம். பொருளாதாரம் சீர்குலைந்தால், அவர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை முறையும் வீழ்ச்சியடையும். இலங்கைக்கான பொருட்களை இறக்குமதி செய்வது மட்டுப்படுத்தப்பட்டால் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. இது பொருளாதாரத்தை பாரியளவில் பாதிக்கிறது. அத்துடன் அனைவருக்கும் இந்த மண்ணில் சமமாக வாழக்கூடிய திறனை வழங்குவது மிக முக்கியமான விஷயம்.

கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடுகையில் இன்று இலங்கையின் திசையை நோக்கும் போது பெரும்பான்மையான முஸ்லிம்கள் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்கு ஆதரவாகவே உள்ளனர்.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவைக்கு மேல் இரண்டு தடவைகள் சாதித்து தெய்வத்தை காட்டினார்.

1999 இல் இலங்கையின் பொருளாதாரம் யுத்தத்துக்கு மத்தியில் முதல் முறையாக வீழ்ந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2001 ஆம் ஆண்டு அரசாங்கத்தை பொறுப்பேற்று 2004 ஆம் ஆண்டு வரை பிரதமராக பொருளாதாரத்தை மீட்டெடுத்தார்.

2022 ஆம் ஆண்டு, வேறு யாராலும் பொறுப்பேற்க முடியாது என்று அவர்கள் பின்வாங்கிய போதும், இறுதியாக, ஜனாதிபதி பொறுப்பேற்று இன்றுவரை பொருளாதாரத்தை மீட்டெடுத்துள்ளார். எனவே எமது சமூகத்தில் அனுபவம் வாய்ந்த இந்த தலைவரால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை எவரும் சீர்குலைக்க விரும்பவில்லை. நாம் ஏன் இன்னும் விஷப் பரீட்சையில் இறங்க வேண்டும்?

எனவே, இந்த நாட்டின் நிர்வாகத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். நாங்கள் பிரதிநிதிகளாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கிறோம் என்றும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இங்கு இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம், இஷாக் ரகுமான், ஏ.எச் எம்.பௌஸி, அலிசாஹிர் மௌலானா, எச்.எம்.எம்.முஷாரப் ஆகியோரும் கருத்து தெரிவித்தனர்.

## சாரதி அனுமதிப்பத்திரங்களை...

சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்படுமெனவும் நிஷாந்த வீரசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் பழைய கனரக சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்துள்ளவர்கள் புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு பதிலாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பழைய சாரதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து புதிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாக நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

பழைய கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் தவிர, புதுப்பிக்க முடியாத இலகு ரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களின் 10 இலட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்களும் எதிர்காலத்தில் இரத்து செய்யப்படவுள்ளதாக அவர் கூறினார்.

## எவராலும் இந்த நாட்டை...

இந்த நாட்டை கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நீர்கொழும்பு ஒலென்ரா ஹோட்டலில் நடைபெற்ற முக்கிய செயற்பாட்டாளர்களின் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.மேலும் கருத்து தெரிவித்த நிமல் லான்சா எம்.பி.,

“நாம் தலைமையை வழங்கி அனைத்து விடயங்களையும் வென்றெடுத்துள்ளோம். மக்களுடன் களத்தில் இருப்பவர்களை அரசியலில் முன்னோக்கி கொண்டுவர வேண்டும். மக்களுக்கு உதவாதவர்களை கொண்டு வருவதன் மூலம் மக்களும் நாடும் பின்னோக்கி செல்லும். கிராமத்தையும் நகரத்தையும், நாட்டையும் யாரால் கட்டியெழுப்ப முடியும்? ஜனாதிபதி ரணிலை தவிர வேறு எவராலும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அனுபவம் இல்லாதவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இந்நாட்டின் நிலைமைக்கு ஏற்ப சர்வதேச சமூகத்துடன் தொடர்பு வைத்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு யாராலும் இந்த நாட்டை காப்பாற்ற முடியாது. அதனால்தான் பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான எம்.பி.க்கள் அவருடன் இணைந்துள்ளனர்.

## கைகலப்பில் ஈடுபட்ட...

தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணிஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

எனினும் தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக அவரை சந்தித்து அறிவித்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் உள்ளக மோதல்கள் அதிகரித்துள்ளதையடுத்து, ஒருவர் மாறி ஒருவர் பொது வெளிகளில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரை துரோகியென பகிரங்கமாக விமர்சித்திருந்தார்.

இந்நிலையில் இவர்கள் இருவரும் அந்த தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்குபற்றிய போது வாக்குவாதம் தீவிரமடைந்து அது மோதலில் முடிவடைந்துள்ளதாக தெரியவருகின்றது.

## வைத்தியர் ஒருவரை பணி...

தொடர்பாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மன்னார் வைத்தியசாலையில் குழந்தையொன்றை பிரசவித்த 27 வயது பட்டதாரியான இளம் தாய், அதிக குருதிப்போக்கு காரணமாக கடந்த மாதம் 28ஆம் திகதி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார். எவ்வாறாயினும் அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்த வைத்தியர்கள் அவருக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கவில்லையென்றும் வைத்தியர்களின் அசமந்தப்போக்கு காரணமாக அவர் மரணித்ததாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைய ஏற்கனவே நான்கு பேர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு தாதியர்களுக்கும் இரண்டு குடும்ப நல சுகாதார உத்தியோகத்தர்களுக்குமே இவ்வாறு பணி இடைநீக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே இந்தச் சம்பவம் தொடர்பில் வைத்தியர் ஒருவருக்கும் பணி இடைநீக்கம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்
## (22.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். அலுவலகத்தில் பணிச்சுமை கூடும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி அளிக்கும்.

**ரிஷபம் :**
எதிர்பார்த்த பணம் வரவு கைக்கு கிடைக்கும். இனிப்பான செய்தி கிடைத்து இல்லத்தில் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்.

**மிதுனம்:**
மகிழ்ச்சி கொள்ளும்படி பணம் கைக்கு வந்து சேரும். நண்பர்கள் உறவினர்களும் தகுந்த நேரத்தில் உதவி செய்வார்கள்.

**கடகம்:**
நண்பர்களின் உதவி மகிழ்ச்சி அளிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை அடைவீர்கள்.

**சிம்மம்:**
வரவேண்டிய பணம் தாமதம் இன்றி வந்து சேரும். எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடப்பதால் மனதில் இனபுரியாத மகிழ்ச்சி குடியேறும்.

**கன்னி:**
சமூகத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பேச்சை குறைத்து செயல்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்து முக்கிய காரியங்களை சாதிப்பீர்கள்.

**துலாம்:**
பணம் கைக்கு வருவதில் சிறுசிறு தாமதங்கள் ஏற்படலாம். பெண்களின் மரியாதைக்கு பங்கம் வராமல் நடந்து கொள்வதன் மூலம் நன்மைகளை அடைவீர்கள்.

**விருச்சிகம்:**
பணப்பரிவர்த்தனையில் நிதானப் போக்கும் அவசியம். வரவேண்டிய பணம் தாமதமாக வந்து சேரலாம்.

**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணிகளில் அதிக கவனத்துடன் இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும்.

**மகரம்:**
வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். எதிர்பார்த்தவைகள் சற்று தள்ளி போகலாம். வட திசையில் இருந்து வரும் தகவல் மனதுக்கு நிம்மதியை தரலாம்.

**கும்பம்:**
மனதில் சலனமும் செய்யும் காரியங்களில் தடுமாற்றமும் ஏற்படலாம். அவசியமான காரியங்களை கவனமுடன் செய்வது பிரச்சனைகளை தவிர்க்கும்.

**மீனம்:**
எதிர்பார்க்கும் உறவினர்கள் நண்பர்கள் கேட்ட உதவி செய்ய முடியாமல் அவர்களின் அதிர்ச்சிக்கு ஆளாகலாம்.

### ஜனாதிபதி பங்கேற்கும் கூட்டம்

# ஏறாவூர் நகரில் நாளை ஏற்பாடு அலி சாகிர் மௌலானா MP விசேட உரை

ஏறாவூரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளும் தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தை கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான தற்போதைய வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட் ஏற்பாடு செய்துள்ளார்.

கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானாவும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

அலி சாகிர் மௌலானா அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து தனது ஆதரவை தெரிவித்திருந்தார்.

## 2048 க்குள் வறுமையற்ற...(3ஆம் பக்க தொடர்)

சம்பளமும் 55 ஆயிரம் ரூபாவாக அமையும். அந்த வகையில் வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு இவ்வாறு சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பணத்தை அச்சிட முடியாது என்ற அடிப்படையில் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன் அரச நிதி முகமைத்துவ சட்டத்தை நாம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளோம். பொருளாதார மாற்றம் சட்டம் சட்டத்தையும் நாம் கொண்டு வந்தோம். அதனை ஊழல் மோசடிகளை நிறுத்தும் சட்டமாக நாம் இனங்காட்ட முடியும்.

அந்த வகையில் 2048ஆம் ஆண்டுக்குள் வறுமையற்ற நாடாக இலங்கையை கட்டி யெழுப்பவும் தனிநபர் வருமானத்தை 20,000 டொலராக அதிகரிக்கவும் நாம் நடவடிக்கை எடுப்போம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிறைவேற்றதிகாரம்...(3ஆம் பக்க தொடர்)

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"ஊழலற்ற அரச நிர்வாகத்தை உருவாக்குவதற்காகவே கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை நாம் உருவாக்கினோம். எனினும் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

இவ்வாறான பின்னணியில் தான் 2022 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

1972 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் இரண்டு தேர்தல்கள் மாத்திரமே காணப்பட்டன.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தியதன் பின்னர் நான்கு தேர்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறிய அரச நிர்வாக அலகினைக் கொண்ட இந்த நாட்டுக்கு நான்கு தேர்தல்கள் அவசியமற்றன.

1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்து செய்வதாக குறிப்பிட்டார்.

எனினும் வழங்கிய வாக்குறுதியை அவர் நிறைவேற்றவில்லை.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த எந்த தலைவர்களும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

அந்த வகையில் நிறைவேற்று ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே பல பிரச்சினைகள் உருவாகின. அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை இரத்து செய்யும் தேவை தற்போது உருவாகியுள்ளது" என்று மேலும் தெரிவித்தார்.

## சட்டமூல பரிசீலனைக்கு...(3ஆம் பக்க தொடர்)

எரான் விக்கிரமரத்ன மற்றும் ஜகத் குமார சுமித்ராரச்சி ஆகிய உறுப்பினர்களை தான் மேலதிக உறுப்பினர்களாக நியமித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார். அதேபோன்று 'பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தம்' எனும் சட்டமூலத்தின் பரிசீலனைக்கென 113 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவில் சேவையாற்றும் பொருட்டு சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி, கஞ்சன விஜேசேகர, பிரமித்த பண்டார தென்னகோன், ரோஹண திஸாநாயக்க, அநுராத ஜயரத்ன, சட்டத்தரணி சந்திம வீரக்கொடி, மனோ கணேசன் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்தார்.

# வடக்கின் உதயம்

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில்

## முறைப்பாடுகளை தெரிவிக்க தொலைபேசி இலக்கங்களை காட்சிப்படுத்த நடவடிக்கை

(கரவெட்டி தினகரன், பருத்தித்துறை , யாழ் .விசேட நிருபர்கள்)



வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கான தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய அறிவிப்பு பதாகை காட்சிப்படுத்தப்பட வேண்டுமென ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகள், அரச மருந்தகங்கள் ஆகியவற்றில் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய பதாகை காட்சிப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் மாகாண சுகாதார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள், நோயாளர்களும், வைத்தியர்களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சேவையை பெற்றுக் கொள்வதில் ஏற்படும் தாமதம் அல்லது சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய உயர் அதிகாரிகளின் தொடர்பு இலக்கங்கள் ஆகியன குறித்த பதாகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டுமெனவும் ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் அறிவித்தல் பதாகையில் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டுமெனவும், பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் சுகாதார துறை உயர் அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் 'அபயம்' பிரிவின் தொலைபேசி இலக்கமும் அறிவித்தல் பதாகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நோயாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதோடு, அவர்களுக்கான சேவையை உறுதிப்படுத்த சுகாதார துறையினர் மேலும் அர்ப்பணிப்போடுசெயற்படவேண்டும்எனவும் வடக்கு மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## போதைப்பொருள் உட்கொண்ட மாணவன் வைத்தியசாலையில் அனுமதி

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியா நகரை அண்டிய பாடசாலையொன்றில் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவன் ஐஸ் போதைப்பொருள் பாவனை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலையில் தரம் 7 இல் கல்வி பயிலும் 12 வயது மாணவன் ஒருவனே இவ்வாறு போதைப்பொருள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளார். போதைப்பொருளை உட்கொண்டு சிறிது நேரத்தில் மாணவன் தொடர்ச்சியாக வாந்தி எடுத்தமையால் பெற்றோருக்கு தெரியப்படுத்தி அவர்கள் ஊடாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட மாணவன் தற்போது நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர் . மாணவன் ஐஸ் போதைப்பொருளை பாவித்ததன் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வடமாகாண குத்துச்சண்டை போட்டியில் மடு கல்வி வலய மாணவன் சாதனை





(மன்னார் குறூப் நிருபர்)

முல்லைத்தீவில் கடந்த 17 மற்றும் 18ஆம் திகதிகளில் நடைபெற்ற வடமாகாண குத்துசண்டை போட்டியில் மடு கல்வி வலய மாணவன் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பாடசாலை ரீதியாக 20 வயதுப் பிரிவில் குத்துசண்டை போட்டியில் பங்குபற்றியே பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலய மாணவன் விஜிதன் கபிலன் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

தற்போது மாகாண மட்ட பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

## யாழில் சூறாவளி
## ஐந்து மாடி குடியிருப்பு கட்டடம் சேதம்



(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை ஏற்பட்ட சூறாவளி காற்று காரணமாக குருநகர் பகுதியில் ஐந்து மாடி குடியிருப்பு கட்டடத்தின் கூரை சேதமடைந்தது.

குறித்த அனர்த்தம் காரணமாக மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 11பேர் பாதிப்படைந்தனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவால் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டன.

அதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட புலோலி மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட நாகதம்பிரான் கோவில் மீது பனைமரம் முறிந்து விழுந்ததில் கோயில் சேதமடைந்துள்ளது.

## சுன்னாகம் ரோட்டரி கழக புதிய தலைவராக கிருபாகரன் தெரிவு

சாவகச்சேரி விசேட நிருபர்



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் 2024 - 25 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவராக அண்மையில் ரோட்டரியன் கிருபாகரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் முன்னாள் தலைவர் கிங்ஸ்லி தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் ரோட்டரி மாவட்ட ஆளுநர் சுசேன ரணதுங்க, ரோட்டரி மாவட்ட செயலாளர் காமினி ரத்நாயக்க, ரோட்டரி உதவி மாவட்ட ஆளுநர் ரகுராம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அவசர கலந்துரையாடல்

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் மாலை அவசர கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கணகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், உதவி மாவட்ட செயலாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் , வைத்தியசாலை பணிப்பாளர், அருட்தந்தையர்கள், மற்றும் வைத்திய நிபுணர்கள் ,சிவில் சமூக பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் எதிர்கால நகர்வு தொடர்பாகவும் மக்கள் அச்சமின்றி வைத்தியசாலைக்கு வரும் சூழலை ஏற்படுத்தி முன்னோக்கிநகர்வோம்என்னும்நோக்கு நிலையில் பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

சில விடயங்களுக்கு தீர்வு கோரி ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுவதாக அரசாங்க அதிபர் கூறினார்.

மேலும் இன்முகத்தோடு நோயாளரை அணுகும் முறைமை தொடர்பில் பயிற்சி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இளம் தாயின் துன்பியல் சம்பவம் போன்று இனி நிகழக்கூடாது என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

## யாழில்; மக்கள் போராட்ட முன்னணியின் தேர்தல் பிரசாரம்

(யாழ். விசேட நிருபர்)



மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேயை ஆதரித்து நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமான பிரசார நடவடிக்கை யாழ்ப்பாணம் நகரப்பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்று குழு உறுப்பினர் வசந்த முதலிகே, புதிய சனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு மக்களுக்கு துண்டுப்பிரசுரங்களை வழங்கியிருந்தனர்.

## ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் வெள்ளவத்தை *Omega Inn* விடுதியில் நடைபெறவுள்ளது.

சகல சங்க அங்கத்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இந்நிகழ்வு கொழும்புக் கிளையின் நடப்பாண்டு தலைவர் எஸ். சிவஸ்கந்தா தலைமையில் நடைபெறுவதுடன், கல்லூரியின் முன்னாள் அதிபர் தெய்வேந்திரராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

மேலதிக விபரங்களுக்கு செயலாளரை 071 4767489 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு சங்க அங்கத்தவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

## புதுக்குடியிருப்பு தேவிபுரத்தில் மயான காணியை தனிநபர் ஆக்கிரமித்து வருவதாக குற்றச்சாட்டு



(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

புதுக்குடியிருப்பு தேவிபுரத்தில் மயான காணியை தனிநபரொருவர் ஆக்கிரமித்துள்ளதாக கிராம மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட தேவிபுரம் பகுதியிலுள்ள பொது மயானத்துக்கு சொந்தமான காணியை தனிநபரொருவர் ஆக்கிரமித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தேவிபுரம் மயான காணியானது 3.5 ஏக்கர் பரப்பளவு கொண்டது. பிரதேச செயலகம், பிரதேசசபையினால் எல்லைப் படுத்தப்பட்டு கிராம மட்ட அமைப்புக்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

தேவிபுரம், பாரதிவீதி, கணேஸ்வீதி,புதிய குடியிருப்பு மற்றும் ஏனைய அண்டிய பகுதிகளிலுள்ள கிராம மக்கள் இதனை பயன்படுத்திவருகின்றனர்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக சமூக அமைப்புக்களால் பகுதியளவில் எல்லைப்படுத்தப்பட்டு தூண்கள் போடப்பட்டிருந்தன. எனினும் தனிநபரொருவர் அரை ஏக்கர் காணியை கனரக இயந்திரம் கொண்டு துப்புரவு செய்து அதனை கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கிராம மக்களால் கிராம சேவையாளர் மற்றும் அமைப்புக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் பிரதேச செயலகம், பிரதேசசபையில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

## சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 05 டிப்பர் வாகனங்கள் மீட்பு



(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற ஐந்து டிப்பர் வாகனங்களை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் ஐவரை கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் தலைமையின் கீழ் பொலிஸ் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 73 இடங்களில் யானைகள் கணக்கெடுப்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் யானைகள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் 73 இடங்களில் யானைகள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய ரீதியாக காட்டு யானைக் கணக்கெடுப்பானது 13 வருடங்களின் பின்னர் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக 17,18,19ஆம் திகதிகளில் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் ஒரே நேரத்தில் கணக்கெடுப்புகள் ஆரம்பமானது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாங்குளம், ஒட்டுசுட்டான்,புதுக்குடியிருப்பு,வெலிஓயா ஆகிய நான்கு பிரதான தொகுதிகளில் வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பதினொரு உப பிரிவுகளின் எழுபத்திமூன்று மத்திய நிலையங்களில் கணக்கெடுப்பு ஆரம்பமானது. தண்ணீர் உள்ள இடங்களில் கண்காணித்தல் என்ற முறையை பயன்படுத்தி கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள யானைகள் நீர் அருந்தும் குளங்களின் கரையோர பகுதிகளை மையமாக வைத்து இந்த கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். அதற்கமைய மாவட்டத்தில் 155 கணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இறுதியாக 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மனிதயானை மோதல் அதிகரித்துள்ளது. பல பிரதேசங்களில் யானை வேலிகள் அமைத்து கொடுக்கப்படாமையால் ஒவ்வொரு போக விவசாய செய்கையிலும் யானைகளால் பாரிய அழிவுகளை விவசாயிகள் எதிர்நோக்கிவருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## 'வைத்தியரின் அலட்சியத்தினால் எனது குழந்தை இறந்தது'

தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

வவுனியா விசேட நிருபர்




வவுனியா வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவரின் அலட்சியத்தினால் தனது குழந்தை பிறந்து இறந்துள்ளதாக குழந்தையின் தந்தை வவுனியா பொலிஸ்நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா, செட்டிகுளம், பிரமனாலங்குளம் பகுதியில் வசிக்கும் நாம் எனது மனைவியினை பிரவசத்திற்காக கடந்த 17 ஆம் திகதி வவுனியா வைத்தியசாலையின் 7 ஆம் விடுதியில் அனுமதித்திருந்தேன். எனினும் வைத்தியர்களின் அசமந்த போக்கினால் எனது குழந்தை இறந்தது.

மனைவிக்கு நடந்த கொடுமைக்கு அவர்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும். எனக்கு நீதி கிடைக்காமல் நான் குழந்தையின் சடலத்தை பொறுப்பேற்கமாட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பில் தந்தை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். இது தொடர்பாக வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் சுகுணனிடம் கேட்டபோது உள்ளக விசாரணை இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board | செவ்வாய் 2024.08.20 | உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk | NLB

மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5571 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.20,162,824.00
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 7 0 3 7 0 3

அத சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 146 | ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 3 7 0 3

கொவிசெத | சீட்டிழுப்பு இலக்கம் 3813 | சீட்டிழுப்பு திகதி 2024.08.20 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.70,665,246.72
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 08 47 70 71 | விசேட எழுத்து V | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 60825

Mega POWER | சீட்டிழுப்பு இலக்கம் 1919 | 2024.08.20 | 84582 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.442,961,230.00
ஆங்கில எழுத்து L | சுப்பர் இலக்கம் 15 | வெற்றி இலக்கங்கள் 09 28 42 56 | அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP | திகதி 2024.08.20 | சீட்டிழுப்பு இலக்கம் 0397 | ஆங்கில எழுத்து V | L7 எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 9 3 7 8 4 3 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 34,506,233.28

ராசி சுப பலன் | திகதி 2024.08.20 | சீட்டிழுப்பு இலக்கம் 880 | அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,904,415.20
வெற்றி இலக்கினம் மேஷம் | வெற்றி இலக்கங்கள் 29 32 34 37 | தனயோக இலக்கம் 58596 | நாளுக்கான விதி எண் 04

தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1601 | 2024.08.20 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,435,025.84
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கங்கள் 18 24 47 69 | விசேட எழுத்து W | இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 62752

# கிழக்கின் குரல்



நாடு இன்றிருக்கும் நிலையில்...

## மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க

### தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன்

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

எமது நாடு செழிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்குமாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அலுவலகத்தில் நேற்று (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது இதனை தெரிவித்த அவர், தமிழ் பொது வேட்பாளர் என்பது தேவையற்ற விடயம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்பு மொட்டு கட்சியை ஆதரித்த நீங்கள், தற்போது நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்காது, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது ஏன? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,



மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக் ஷ எமது கட்சியை பொறுத்தவரை சிறந்த நண்பர். ஆனால், நாடு இன்று இருக்கும் நிலையை பொறுத்தவரையில் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய ஒரு தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார். எனவே, காலத்தின் தேவையாக அவரை ஆதரிக்க வேண்டியுள்ளது. நாங்கள் மாத்திரமல்ல, இந்த நாட்டின் பெரும்பான்மையான தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரித்து கொண்டிருக்கின்றார்கள். அத்துடன், சிறந்த வெளிநாட்டு கொள்கை உடைய ஒருவவராகவும், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியினை தீர்த்து வைப்பதற்கு IMF இன் உதவிகள் தேவைப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழலில், அதனைத் தொடர்ந்து கொண்டு செல்லக்கூடிய நம்பிக்கையுடைய தலைவராகவும் ரணில் விக்கிரமசிங்கவே காணப்படுகின்றார். 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டில் ஒரு நிரந்தர தீர்வு திட்டத்தின் ஊடாக தமிழர்களுக்கு கூடிய அதிகாரங்களை வழங்கவுள்ளதாக, எமது தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தனிடம் அவர் வாக்குறுதியளித்துள்ளார்.

எமது கட்சி அரியாசனம் ஏறுவதற்கு அரசியலுக்கு வந்த கட்சியல்ல. மக்களை ஏமாற்றாமல் மிகத் தீர்க்கமான முடிவொன்றை எடுத்துள்ளோம். கிழக்கு மக்களை நேசிக்கும் கட்சி என்ற வகையில், ஜனாதிபதியின் வெற்றிக்காக கிழக்கு மாகாணத்தின் பிரதான அரசியல் கட்சி என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆரதவு வழங்கத் தீர்மானித்துள்ளோம் என தெரிவித்தார்.

## இனம், மதம், மொழி வேறுபாடுன்றி நாட்டு நலன் கருதி செயற்பட வேண்டும்

### ஸ்ரீ.மு.கா தேசிய அமைப்பாளர் எம்.எஸ் தௌபீக்

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)



ஜனாதிபதி தேர்தல், இனம், மதம் மற்றும் மொழி வேறுபாடுகளை பார்த்து வாக்களிக்கக்கூடிய தேர்தலல்ல எனவும், அனைவரும் நாட்டு நலனை மையப்படுத்தி சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக நேற்று (21) ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோது, இதனை தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து எழுந்துகொள்ள முடியாத ஒரு காலகட்டத்தில் மிக முக்கியமான ஜனாதிபதி தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியுள்ளோம்.

அரசியல் வரலாற்றில் அதிகளவான வேட்பாளர் போட்டியிடும் ஓர் தேர்தலாக இத் தேர்தல் காணப்படுவதுடன் வழமைக்கு மாறாக பலத்த போட்டியும் ஏற்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

மூவின மக்களும் சந்தோஷமாக, நிம்மதியாக வாழக்கூடிய நாட்டை உருவாக்குவதே இப்போதைய எமது தேவை. இதனை நாட்டு மக்களும் அறிந்துள்ளார்கள்.

அதனை ஏற்படுத்துவதற்கான ஓர் தலைமையை உருவாக்குவதற்கான தேர்தலாகவே இத்தேர்தலை நாம் பார்க்க வேண்டியுள்ளது. அந்த தலைமைக்கு தகுதியானவர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச என்பதை இப்போது முழு நாடும் அறிந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## வெட்டுக் காயங்களுடன் சடலமொன்று மீட்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா பகுதியில், வெட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்று முன்தினம் (20) இரவு மீட்கப்பட்டுள்ளது.

சாரதா வீதி நாவற்குடா கிழக்கைச் சேர்ந்த 44 வயதுடைய, மூன்று பிள்ளைகளின் தந்தையான மரியதாஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புதிய கல்முனை வீதி நாவற்குடா முதலாம் குறுக்கு வீதியில், வெட்டுகாயங்களுடன் இந்த சடலம் மீட்கப்பட்டதாக தெரிவித்த காத்தான்குடி பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை மாணவிகளுக்கு ஆரோக்கிய துவாய் வழங்கிவைப்பு



(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா அஷிஷா ஃபவுண்டேஷனினால் பாடசாலை மாணவிகளுக்கான ஆரோக்கிய துவாய் வழங்கிவைக்கும் நிகழ்வு, கிண்ணியா அல்மினா மகாவித்தியாலயத்தில் நேற்று (21) நடைபெற்றது.

பாடசாலையின் பிரதி அதிபர் எம்.சி.எம். இம்தியாஸ் தலைமையின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வில், அஷீஸா பவுண்டேஷன் பணிப்பாளர் சாதிக் ஹசன் மற்றும் தாரிக் ஹசன், ஏ.எல்.ஹமீத் மௌலவி உட்பட பாடசாலை ஆசிரியர்கள், மாணவிகள் என பலர் கலந்துகொண்டனர். முஸ்லிம் ஹெல்ப் ஜெர்மனி நிறுவனத்தின் உதவியுடன், 130 பெண் மாணவிகளுக்கான ஆரோக்கிய துவாய்கள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஜித் அமைச்சராக இருந்தபோதே ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றது ; அவர் நீதியை நிலைநாட்டாதது ஏன்?

### ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி கேள்வி

அம்பாறை மத்திய தினகரன் நிருபர்

எமது சகோதர இனமான கிறிஸ்தவ சமூகம் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தமைக்கு, அனைத்து அரசியல் தலைமைகளும், அன்று ஆளும்தரப்பாக இருந்து தற்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களும் பொறுப்புக்கூற வேண்டும் என ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சியின் தலைவர் அன்வர் எம். முஸ்தபா தெரிவித்தார்.

இன்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாஸ, அக்காலத்தில் ஆளும் தரப்பில் ஒரு அமைச்சர்.

இன்று ஜனாதிபதி வேட்பாளராக இருந்துகொண்டு நீதியை நிலைநாட்டப் போவதாக கூறும் அவர் உட்பட பொறுப்பு கூற வேண்டியவர்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள் என தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவை ஆதரித்து, கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,



நாம் ஜனாதிபதியுடன் செய்த ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளில், எதிர்வரும் காலங்களில் இன, மத, பேதமற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தையும் அதற்கான கள நிலைமையும் ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளோம்.

கடந்த காலங்களில் சில அரசியல் தலைவர்களால் திட்டமிடப்பட்டு நாட்டில் பல அசம்பாவிதங்கள் நடத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி, ஏனைய கட்சிகளைப் போன்று சமூக விடயங்களை மழுங்கடித்து நாட்டை சீரழிக்காது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள ஜனாதிபதியின் தரப்பு ஆதரவாக இருக்கிறது.

அத்துடன் மக்களின் நிலப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதியிடம் கலந்துரையாடியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

## பெரும்போக விவசாயிகளுக்கு நியாய விலையில் விதை நெல்லை விநியோகிக்குமாறு கோரிக்கை



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அம்பாறை மாவட்ட பெரும்போக விவசாயிகளுக்கு இம்முறை நியாய விலையில் விதைநெல்லை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை, விதை நெல் உற்பத்தியாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயத்தில், அம்பாறை மாவட்டத்திலுள்ள விதை நெல் உற்பத்தியாளர் சங்கங்கள் கூடிய கவனம் செலுத்தி, விவசாயிகளுக்கு உதவ முன்வர வேண்டும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சிறுபோகத்தின்போது, அம்பாறை மாவட்டத்தில் கிடைத்த சிறந்த நெல் விளைச்சலினால், இம்முறை அம்பாறை மாவட்ட பெரும்போக விவசாயிகளுக்குத் தேவையான விதைநெல்லை, மாவட்டத்திலுள்ள விதைநெல் உற்பத்தியாளர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு, கடந்த போகங்களில் எதிர்பார்த்த நெல் விளைச்சல் கிடைக்காமையினால், தங்களுக்குத் தேவையான விதைநெல்லை வெளிமாவட்டங்களிலிருந்து அதிகவிலைக்கு பெற்றுக்கொண்டனர். இதனால், விதை நெல்லுக்கான செலவு அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால், இம்முறை பெரும்போகத்திற்குத் தேவையான விதைநெல்லை அம்பாறை மாவட்டத்திலயே பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையேற்பட்டுள்ளது. இதற்கேற்ற வகையில், மாவட்டத்திலுள்ள விதைநெல் உற்பத்தியாளர்கள் தயார்படுத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில்

## தேசிய காங்கிரஸின் தேசிய மாநாடு ஜனாதிபதி மற்றும் பிரதமர் பங்கேற்பு



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸின் ஏற்பாட்டில், தேசிய மாநாடு அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெறவுள்ளது. இந்த தேசிய மாநாடு நாளை (23) பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், விஷேட அதிதியாக பிரதர் தினேஷ் குணவர்தனவும் கலந்து கொள்வுள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காட்டு யானைகளின் அட்டகாசம்



(மாளிகைக்காடு குறுப் நிருபர்)

சிறுபோக வேளாண்மை அறுவடை முடிந்த கையோடு அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இவ் வாரத்திற்குள் மட்டும் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு இலக்காகி பலர் உயிரிழந்துள்ளதுடன், குடியிருப்புகள், பயன்தரும் மரங்கள் மற்றும் உடமைகளுக்கும் பலத்த சேதம் விளைவித்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி கிராமத்திற்குள் நேற்று முன்தினம் (20) புகுந்த காட்டு யானை தனியாருக்கு சொந்தமான நெல் களஞ்சியசாலையின் சுவரை உடைத்து அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நெல் மூடைகளையும் சேதப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் தபால்மூலம் வாக்களிக்க 13,116 பேர் தகுதி

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர், கல்லடி குறுப்நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கு, மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 ஆயிரத்து 116 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

13 ஆயிரத்து 448 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில், இவர்களில் 13 ஆயிரத்து 116பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன், 332 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான, தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

அதன்டபடி, செப்டம்பர் 5ஆம், 6ஆம் திகதிகளில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் ஏனைய திணைக்கள அரச உத்தியோகத்தர்கள் தமது திணைக்களங்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தினங்களில் வாக்களிக்கத் தவறும் அரச உத்தியோகத்தர்கள் எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் தத்தமது மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

## காகங்களினால் விவசாயிகள் பாதிப்பு

(நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் அண்மையில் பெய்த மழை காரணமாக, நனைந்த நெல்லை வீதியோரங்களில் காயவைத்து அதனை விவசாயிகள் தனியாருக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு காயவைக்கப்படும் நெல்லை கூட்டமாக வரும் காகங்கள் சாப்பிட்டு வருவதாக விவசாயிகள் கவலை வெ ளியிட்டுள்ளனர்.

இதேவேளை, வீடுகளுக்குள் நுழையும் காகங்கள் வீட்டிலுள்ள உணவுப் பொருட்களையும் சேதப்படுத்தி வருவதாக அப்பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## கிண்ணியாவில் ஆணொருவரின் சடலம் மீட்பு!

(கிண்ணியா மத்திய நிருபர்)

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, ஆலாங்கேணி பிரதேசத்தையும் பைசல் நகர் பிரதேசத்தையும் இணைக்கின்ற பாலத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் (20) இரவு மீட்கப்பட்டுள்ளது.

கிண்ணியா, மஹரூப் நகர், 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த, 60 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான முஹம்மது லெப்பை முபாரக் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொறுப்பு வைத்திய அதிகாரியாக டொக்டர் ஏ.எல். அலாவுதீன் நியமனம்

(ஒலுவில் விசேட நிருபர்)



ஒலுவில் பிரதேச வைத்தியசாலைக்கு புதிய பொறுப்பு வைத்திய அதிகாரியாக வைத்தியர் ஏ.எல். அலாவுதீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய பொறுப்பு வைத்திய அதிகாரியை நியமிக்குமாறு வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரால் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, வைத்தியர் ஏ.எல்.அலாவுதீன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்,அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாகவும், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். இவரின் கடமையேற்பு நிகழ்வில், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள், வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# மாணவர்கள் மத்தியில் சுயகற்றலை சீர்குலைக்கும் AI தொழில்நுட்பம்!

சுயகற்றலை மேற்கொள்வதானது மாணவர்களுக்கு பரந்துபட்ட அறிவை வழங்குகின்றது. இதன் மூலம் ஒரு மாணவன் தான் எதைக் கற்க விரும்புகின்றானோ அதை மட்டுமன்றி அதற்கு மேலான விடயங்களை பற்றியும் கருத்துக்களை பற்றியும் கற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும் மாணவர்களுக்கு சுயகாற்றலானது தன்னைத்தானே சுயமதிப்பீடு செய்து கொள்வதற்கு உந்துதல் அளிக்கின்றது.

இவ்வகையான கற்றல் தற்காலத்தில் மிகவும் அரிதாகிக் கொண்டு வருகின்ற நிலைமையை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. அதற்கு முக்கிய காரணமாக AI தொழில்நுட்பம் அதாவது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது மாணவர்களிடத்தில் அதிகளவு பயன்பாட்டை கொண்டதாக காணப்படுகின்றமையே ஆகும். மாணவர்களின் சுயகற்றலானது அழிந்து போகக் கூடிய நிலைமையில் தற்காலத்தில் உள்ளது.

AI தொழில்நுட்பம் எனப்படுவது இயந்திரங்கள் மூலமாக மனித நுண்ணறிவு செயல்முறைகளை உருவகப்படுத்துவதாகும். இது இயற்கை மொழி செயலாக்கம், பேச்சு அங்கீகாரம் மற்றும் இயந்திரபார்வை ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. AI தொழில்நுட்பத்தை தற்பொழுது விற்பனையாளர்கள், சினிமா தயாரிப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் போன்றவர்கள் பயன்படுத்திக் கொண்டு வருகின்றனர். அதை தவிர இன்று மாணவர்கள் மத்தியில் AI கற்றல் அதாவது இயந்திரக் கற்றல் என்பது மிகவும் அதிகமாக பழக்கப்பட்டு கொண்டு வருவதை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்த AI கற்றல் என்பது மாணவர்கள் தமக்கு தேவையான தரவுகளை மிகவும் எளிதான முறையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமக்குத் தேவையான அறிவை எந்த ஒரு ஆவணத்தை படித்துப் பார்ப்பதோ அல்லது தேடி கற்பதற்கோ அல்லது நூலகங்களில் இருந்து கற்பதற்கோ அவசியமில்லாமல் போய்விட்டது. இதனால் மாணவர்கள் இயந்திர கற்றலை நோக்கி தமது செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றனர் இதன் மூலம் பல நன்மைகள் காணப்பட்டாலும் மாணவர்களின் சுயகற்றலானது பின்னோக்கை அடைந்து கொண்டு வருகின்றமையானது பாரியதொரு பாதகமாகக் காணப்படுகின்றது.



AI தொழில்நுட்பம் மூலம் மாணவர்களுக்கு பலவிதமான நன்மைகள் கிடைக்கப் பெற்றாலும் அவர்களது அறிவானது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு அறிவாகவே காணப்பட வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. ஏனெனில் இங்கு அவர்களது சுய கற்றலானது முடங்கிப் போனதொரு விடயமாக உள்ளது.

AI தொழில்நுட்பமானது தகவல் தொடர்புகளை எளிதாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தாலும், நேருக்குநேர் தொடர்பைக் குறைக்கின்ற ஒரு சாதனமாக காணப்படுகின்றது. இதன் மூலம் மாணவர்களின் சமூக திறன்கள் பலவீனப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி வலைத்தளங்களில் காணப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் துல்லியமானதாகவோ அல்லது உண்மைத்தன்மையானதாகவோ காணப்படாமையினால் மாணவர்கள் உண்மைத்தன்மையற்ற விடயங்களை கற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இத் தொழில்நுட்பமானது மாணவர்களை வழிநடத்திச் செல்வதாக உள்ளது.

அதுமட்டுமன்றி மாணவர்கள் வெளியிடங்களுக்கு செல்லுகின்ற நேரங்களை தவிர்த்து தனியாக தமது தொலைபேசியுடன் நேரத்தை செலவிடுகின்றமையால் மனஅழுத்தத்திற்கு வழிவகுக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

AI தொழில்நுட்பத்தின் மூலம் இன்னும் ஒரு பாதக விளைவையும் எம்மால் கூற முடியும். அதாவது, மாணவர்கள் தங்களது சக மாணவர்களுடன் குழு செயல்பாடு மேற்கொள்வதோ அல்லது சக மாணவர்களுடன் இணைந்து தங்களது கற்றல் செயல்பாடுகளை செய்வதற்கோ இந்த AI தொழில்நுட்பமானது இடமளிக்காததை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. அதுமட்டுமின்றி இந்த AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தாத மாணவர்களுக்கும் பயன்படுத்துகின்ற மாணவர்களுக்கும் இடையில் ஒரு இடைவெளியை ஏற்படுத்தக் கூடியதாக இந்த தொழில்நுட்பம் காணப்படுகின்றது.

இவ்வாறான பாதகமான நிலைமைகளை குறைப்பதற்கு சில செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவையானது ஆசிரியர்களுக்கு காணப்படுகின்றது. அதாவது, நாம் மாணவர்களின் விமர்சன சிந்தனையை ஊக்குவிக்கும் செயற்பாடுகளை வழங்க வேண்டும். அதாவது மாணவர்களுக்கு பகுப்பாய்வு செய்வதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் சவால் விடுகின்ற செயல்பாடுகளை சேர்த்து உள்ளடக்கத்தை நாம் வழங்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை மாணவரிடத்தில் செயல்படுத்துவதினால் AI அதிகரித்த பயன்பாட்டை குறைத்து மாணவர்களை சுய கற்றலுக்குள் எம்மால் ஈடுபடுத்த முடியும். முடிவில் பலதரப்பட்ட வளங்கள் மற்றும் கற்றல் பாதைகளை AI தொழில்நுட்பம் கொண்டிருந்தாலும் அது மாணவர்களின் சுய கற்றலை மேம்படுத்தக்கூடியதாக காணப்பட்டாலும் பல குறைபாடுகளையும் அளிக்கக் கூடியதாக காணப்படுகின்றது. இவ்வாறான குறைபாடுகளை மாணவர்களிடத்தில் இனம் கண்டு ஆசிரியர்கள் அதனை குறைக்க கூடிய வழிமுறைகளை வழங்க முன்வர வேண்டும்.

**ஜெ. ஜெறெக்ஷினி,**
2ம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி மற்றும் பிள்ளைநலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

# இன்றைய பிள்ளைகளின் சகபாடிகள் உறவு கட்டமைக்கப்பட வேண்டியது அவசியமா?

ஒன்றாக பாடசாலை சென்று வீடு திரும்பி, மாலையில் ஒன்றுகூடி விளையாடி மகிழ்ந்திருந்த சூழல் இன்றைய தலைமுறையோடு முடிவு கண்டு விட்டது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னிருந்த சகபாடி சூழலும் தற்போதுள்ள சகபாடி சூழலும் முற்றிலும் வேறுபட்டவை.

பிள்ளைகள் சமவயது சகபாடிகளைச் சந்திக்கும் பிரதான இடம் பாடசாலை ஆகும். அங்கு பொதுவான உடை, நடத்தை, ஒழுக்கம் என கட்டுப்பாடு பேணப்பட்டாலும் கூட தற்கால நடைமுறையில் பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புகள், தான் சார்ந்த சமூகம், ஊடகங்கள் என பரந்த அளவில் சகபாடிகளின் உறவை கட்டமைத்துக் கொள்கின்றனர். குறிப்பிட்ட வயதுக்கு மேல் பிள்ளைகள் பெற்றோர், சகோதரர், ஆசிரியர்களை விட சமவயது சகபாடிகளிலேயே அதிக நம்பிக்கை கொள்கின்றனர். காரணம் தாம் சார்ந்த ஒத்த சிந்தனை, ஒத்த செயல்பாடு, எதிர்பார்ப்பு, விருப்பு வெறுப்பு, ஆர்வங்கள், நடத்தை என்பன சமவயது சதபாடிகளிடமே சரளமாக கிடைக்கின்றன. அதீத சுதந்திர உணர்வு, கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்படாமை, புதுமை நாட்டம் போன்ற மனநிலைகள் கட்டிளைமைப் பருவ மாணவர்களின் பொதுவான இயல்பாகும். இதற்கு சமவயது சகபாடிகளின் கூட்டுணர்வு பக்கபலம் சேர்க்கின்றது.

நம் பெற்றோரும் ஆசிரியர்களும் இந்நிலையினை கையாள்வதில் நடைமுறைச் சிக்கல்களைச் சந்திக்கின்றனர். அதீத கட்டுப்பாடுகளை விதித்து யாருடனும் பழகவிடாமல் கற்றல் செயற்பாடுகளுக்கு மட்டும் பிள்ளைகளை மட்டுப்படுத்தியும், அதேவேளை கண்காணிப்பற்ற சுதந்திரத்தை வழங்கி தவறான வழிகளில் பிள்ளைகள் செல்வதையும் அவதானிக்காத அலட்சியமான போக்கினையும் நம் பெற்றோர் கொண்டுள்ளனர். இவ்வாறான சுபாவத்தை ஆசிரியர்கள் கொண்டிருப்பதால் பொதுக் கண்ணோட்டத்தில் பார்க்கையில் நம்



மாணவ சமுதாயத்திற்கு சமவயது சகபாடிகளின் உறவு என்பது எதிர்மறையானதாகத் தென்படலாம். ஆனால் இது சற்று நுணுக்கமாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

சகபாடிகளின் இன்றைய உறவாடல் நிலை முற்றிலும் மாறுபட்டு விட்டது. இன்றைய மாணவர்களின் நட்பு வட்டாரம் துரிதமாகி விட்டது. நம் மாணவர்களின் உடை அலங்காரம், தலைமுடி வெட்டுதல், தன்னை மற்றவர் முன்னிலையில் முன்னிறுத்துதல், மொழிநடை, சிந்தனை, மனப்பாங்கு, மற்றவருடனான அணுகுமுறை, சமூக செயற்பாடுகள் என அனைத்தையும் சமவயது சகபாடிகளே தீர்மானிக்கின்றனர்.

நடைமுறையில் வளர்ந்து விட்ட ஊடக கலாசாரம், சமூக வலைத்தள பாவனை, பிரத்தியேக வகுப்பு கலாசாரம் என்பன நகர்ப்புற மாணவ சமூகங்களை அதிகமாக பாதித்துள்ளன. இதன் காரணமாக குற்றச்செயல்களையும் அவர்கள் புரிகின்றனர்.

சமூகவிரோத செயற்பாடுகள், போதைப்பொருள் பாவனை போன்றன மாணவர்களிடையே கடத்தப்படுவதில் சமவயதுக் குழுக்களின் பங்கு அதிகம். இதற்கு சமூக விரோதிகளின் செயற்பாடுகள் அடிப்படையாய் அமைந்தாலும் மாணவர் சமூகத்தில் பரவுவதில் சமவயது குழுக்களின் பங்கு அதிகமானது.

பாடசாலைகளைக் குறிவைத்துள்ள போதைவஸ்து, சமூகவிரோத குற்ற செயல்களை தடுக்கவும் மாணவர்களை சமூகப்பற்றுள்ள ஒழுக்க விழுமிய நோக்குடைய பொறுப்புள்ள பிரஜைகளாக மாற்றவும் சில உபாயங்களை நம் பெற்றோர்களும் பாடசாலை கட்டமைப்பும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சமவயது சகபாடிகளின் உறவு நிலைகளை தடுப்பதால் தீர்வு இல்லை. சிறந்த நண்பர் வட்டாரத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ள பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டுமே அன்றி, நண்பர்களை நாமே தேர்ந்தெடுத்து கொடுக்க கூடாது. நண்பர்களுக்கிடையில் உள்ள நட்பு நிலையில் வெளிப்படை தன்மையை பேணும் வகையில் பிள்ளைகளிடையே நம்பிக்கையே வளர்த்துக் கொள்ள வேண்டும். கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஆசிரியர்களும் பாடசாலையும் சகபாடி கற்றல் உத்திகளை கையாள வேண்டும்.

நடைமுறை சார்ந்த பிரச்சினைகளை கருத்தில் கொண்டு கலைத்திட்டம் மற்றும் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களுக்கு எதிர்காலம் குறித்த சிறந்த நோக்கு, ஒழுக்க விழுமியங்கள், குறிப்பாக பாலியல் கல்வி, பொழுதுபோக்கு மற்றும் அழகியல் சார்ந்த கல்வி, தேசிய பற்று மற்றும் ஒற்றுமை போன்ற கருத்தமைவுகளைக் கொண்ட கல்வி முறைகளை செயற்படுத்த வேண்டும். பரீட்சையினை நோக்கமாகக் கொண்டு ஓட்டம் போடும் மாணவ சமூகத்தை பின்னின்று துரத்தும் கல்வி முறை தொடர்ந்து நீடிக்குமாயின் கல்வி, சமூகமயமாக்கல் என்ற இரு கருத்தாடல்கள் இடையிலான ஒரு பெரும் இடைவெளி நம் மாணவ சமூகத்தில் வெளிப்படும்.

மாணவப் பருவம் என்பது வாழ்வில் வண்ணமிகு பருவமாகும். இதில் முக்கிய வர்ணங்கள் நட்பு நிலையிலேயே தங்கியுள்ளன. அதனை வாழ்விற்கு சாதகமாக மாற்றும் திறமை அனைத்து பிள்ளைகளிடமும் உண்டு என்பதை மறந்து விடலாகாது. அதற்கு தகுந்த வழிகாட்டல்களை நம் பெற்றோரும் பாடசாலைகளும் வழங்கினாலே போதுமானது. இல்லையேல் கற்ற சமூகம் சமூக பொறுப்பின்றி சுயநலப் போக்கினையும், சமூகமயமாக்கம் பெற்ற சமூகம் கல்வியில் சிறக்க வழி இன்றி தவிப்பதனையும் போன்ற இருநிலைப்பட்ட பேதம் நம் சமூகத்தை தொடர்ந்தும் தேக்க நிலையிலே வைத்திருக்கும்.

**சுபாகரன் சதீஸ்**
4ம் வருட கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவன்
கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

# விழுமியக் கல்வியே மாணவர்களை நற்பிரஜைகளாக மாற்ற வழிவகுக்கும்

கல்வியில் மனித மதிப்பு ஏற்படுவதற்கு விழுமியக் கல்வியின் முக்கியத்துவம் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் மனித வாழ்வை செம்மையானதாகவும், அர்த்தமுள்ள வகையிலும் அமைத்துக் கொள்வதற்கு மனித விழுமியங்கள், அறக்கருத்துக்கள் என்பன துணை செய்கின்றன.

விழுமியம் என்பது தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் இன்றியமையாததாகும். மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை விழுமியப் பண்புகள் நம் வாழ்வில் பயணிக்கின்றன. குறிப்பாக மனித விழுமியங்களாக அன்பு, பரிவு, இரக்கம், நேர்மை, ஒழுக்கம், உதவி செய்யும் மனப்பாங்கு, அகிம்சை என பல உள்ளன. மேலும் விழுமியக் கல்வியின் முக்கியத்துவத்தை கோட்பாட்டு ரீதியிலும், செயற்பாட்டு ரீதியிலும் வழங்குவதில் பாடசாலையானது பிரதான இடத்தை பெறுகின்றது.

இன்றைய நவீன உலகில் அனைத்து விடயங்களும் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியால் உள்ளங்கைக்குள் சுருங்கி விட்டன. அவ்வாறானதொரு நிலையில் தற்போது அதிகமாகப் பேசப்படும் விடயம் விழுமியக் கல்வியின் முக்கியத்துவம் ஆகும். ஒரு குழந்தை பிறந்ததும் குழந்தைக்கு விழுமியக் கல்வியைப் போதிப்பது குழந்தையின் பெற்றோர், சுற்றுப்புறச் சூழல், இயற்கை நிகழ்வுகள் ஆகும். ஒவ்வொரு விடயத்தையும் தனது மழலை மொழியின் மூலம் அறிகிறது. குழந்தையொன்று இயற்கையின் ஒவ்வொரு விடயங்களையும் தன்னைச் சுற்றியுள்ளவர்கள் பேசுகின்ற செயற்பாடுகள் அனைத்தையும் கூர்மையாக அவதானிக்கின்றது.

இவ்வாறு ஒரு குழந்தை பிள்ளைப் பருவத்தில் விழுமியக் கல்வியைத் தொடர்கிறது. அங்கு தனது விழுமியக் கல்வியை சிறப்பாக தொடருவதற்கு 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்ற முதுமொழிக்கிணங்க அவன் குழந்தை பருவத்தில் கற்ற விழுமியமானது அக்குழந்தை பாடசாலையிலும் விழுமியக் கல்வித் தருவதற்கு பெரிதும் துணை புரிகின்றது.



மாணவராக பாட சாலை சென்றதும் அவனுக்கு பெற்றோர், தெய்வம் எல்லாம் கல்வியை போதிக்கும் ஆசிரியர் ஆவார். அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்து சிறந்த விழுமியப் பண்புகளைக் கொண்ட பிரஜையாக அவர்களை உருவாக்குபவர்களாக ஆசிரியர் காணப்படுகின்றார்.

பண்டைய காலத்தை எடுத்துக் கொண்டால் ஒரு மாணவன் தனது ஐந்து வயதளவில் பெற்றோர், உறவினர்களைப் பிரிந்து குருகுலம் சென்று குருகுலக்கல்வி பெறுகின்றான். அங்கு குரு தந்தையாகவும், குரு தாயாகவும் இருந்து வழிநடத்துவார். அதன் மூலம் மாணவர்கள் உலக அறிவோடு சேர்ந்து விழுமிய கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகவும் சிறப்பாகக் கற்றனர். இங்கு குருவை மதித்தல், குருவிற்கு பணிவிடை செய்தல், சகோதரத்துவம், பகிர்ந்துண்ணல், சத்தியம், உண்மை, நீதி போன்ற விழுமியப் பண்புகள் வளர்க்கப்பட்டன.

மேலும், தற்காலத்தில் மாணவர்களின் வாழ்க்கை முறை முற்றாக மாற்றம் அடைந்துள்ளது. எல்லா மாணவர்களுக்கும் குடும்பச்சூழல் வளமானதாக அமைவதில்லை. வறுமை, பெற்றோரை இழந்த நிலை ஒருபுறமிருக்க கூட்டுக் குடும்பங்கள் தனிக் குடும்பமாக மாறிவிட்டன. தந்தையின் வழிகாட்டல் மற்றும் அறிவுரை, தாயின் அரவணைப்பு என்பன சரியாகக் கிடைக்காமல் அநேக மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றனர்.

இவ்வாறான பின்புலங்களைக் கொண்ட மாணவர்களாலும் சமீபகாலமாக நடைமுறைப் பாதிப்புகள் பல ஏற்படுகின்றன. மாணவர்களிடத்திலே போதைப்பொருள் பாவனை, மாணவர்கள் மீதான துஷ்பிரயோகம், கீழ்ப்படியாமை, பாடசாலைக்கு எதிரான வன்முறைகள் என்பன அதிகரித்து விட்டன.

ஒவ்வொரு ஆசிரியரும் பாடசாலையில் தான் கற்பிக்கும் மாணவர்களை சிறந்த நற்பிரஜையாக உருவாக்க இலட்சியத்துடன் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்.

விழுமியப் பண்புகளையும் அதன் முக்கியத்துவத்தையும் கலைத்திட்டத்தின் ஊடாக, இணைப்பாட விதான செயல்பாடுகள் மூலமாக வளர்க்க வேண்டும். ஆசிரியர்கள் மட்டுமல்லாது பெற்றோரும் விழுமியக் கல்வியை, பண்புகளை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

தத்தமது சமய ஒழுகலாறுகள் மற்றும் சமய கருத்துக்களை அற விழுமியங்களை பிள்ளைகளின் வாழ்க்கையை செம்மையாக்கும் வகையில் வழங்க வேண்டும். பாடசாலையில் விழுமியக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படும் பிள்ளைகளை பாராட்டும் விதமாக ஊக்குவிப்புகளை வழங்க வேண்டும்.

பாடசாலையில் சமத்துவம். சகோதரத்துவம் என எல்லோரும் சமமானவர்கள் என வலியுறுத்தும் விதத்தலாக சீருடை அணிந்து செல்கின்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காலை கூட்டத்துடனான சமய ஆராதனைகள் விசேடமாக நடைபெறுகின்றன. பெரியோரை மதித்தல் மற்றும் உதவி செய்தல், அன்பாகப் பழகுதல், இயற்கையைப் பேணுதல், ஏழைகளுக்கு உதவுதல், ஒழுக்கமாக வாழுதல் என விழுமிய கல்வியைப் போதிக்கும் பாடத்திட்டங்கள் உள்ளடக்கியதாக பாடப்புத்தகங்கள் கல்வி அமைச்சினால் இலவசமாக அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

ஆத்திசூடி, நன்னூல், குறுந்தொகை, திருக்குறள் போன்ற அறக்கருத்துக்களை கூறும் இலக்கியங்கள் தமிழ்ப் பாடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

9449 - K. V. D. Teja Karavita - Queens Agencies, Pallegama, Embilipitiya.

**ADZ HOTLINE - 011 2 429 369**
**CALL - 011 2 429 342/ 343**

# கேள்வி அறிவித்தல்

## கைத்தொழில் அமைச்சு
## இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்

## லோடர் வாகனமொன்றை மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்

**LMSL/SUP/DPC/21/2024**

கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள முழுமையான அரச நிறுவனமான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்டின் புல்மோட்டை பொறித்தொகுதியில் கனிய மணல் உற்பத்திக்கு இயைபாக மணல் அகழ்தல், குவித்தல், போக்குவரத்திற்கு மணலை ஏற்றுவதற்காக பொருத்தமான நபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து லோடர் வாகனமொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. இதில் ஆர்வம் காட்டும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் 2024-08-22ஆம் திகதி முதல் 2024-09-11ஆம் திகதி ஆரம்பமாகும் எந்தவொரு வேலை நாளிலும், மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தேவையான வாகனங்களின் எண்ணிக்கை | விபரங்கள் | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|---|
| 01 | லோடர் வாகனமொன்றை மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | 250,000.00 |

2. மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 ரூபாவை ரொக்கப் பணமாக செலுத்துவதன் மூலம் 2024-08-22ஆம் திகதி முதல் 2024-09-11ஆம் திகதி பி. ப. 2.30 மணி வரை மேற்கூறிய முகவரியிலுள்ள தலைமை அலுவலகத்தில் அல்லது புல்மோட்டை பொறித்தொகுதி வழங்கல் பிரிவில் விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-09-12ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையில் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
4. இயைபுடைய ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்கள் தேவைப்படுமானால் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வழங்கல் முகாமையாளர் - தலைமை அலுவலகம்
011-2883972 (நேரடி)
011-2883951/2

பிரதிப் பொது முகாமையாளர் (பொ/இ) - புல்மோட்டை பொறித்தொகுதி
026-2256131/026-2256132

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (DPC),**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்,**
**341/13, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## பரீட்சைகள் திணைக்களம்

## 2024/2025 ஆம் ஆண்டிற்கு சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்கான விலைமனுக்களின் அழைத்தல்

**Bid No.: (4/6/6/2024)**

1. பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒரு வருட காலத்திற்கு சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்காக நிகரான சேவைகளை வழங்குவதில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவமுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. 1987ம் ஆண்டின் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 06ம் பிரிவின் விதிகளின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரால் வழங்கப்படும் ஓர் செல்லுபடியாகும் சான்றிதழை ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள, 3 ஆம் மாடியிலுள்ள வழங்கல் கிளையின் வழங்கல்களுக்கான உதவி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொடர்பு தொலைபேசி : 011-2784393)
5. 2024.08.22 ஆம் திகதியிலிருந்து 2024.09.11 ஆம் திகதி வரையும் (இரண்டு நாட்களும் அடங்கலானது) வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 5,100 ரூபாவை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள 3 ஆம் மாடியின் வழங்கல்களுக்கான உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2024.08.30 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பரீட்சைகள் திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடந்தேறும்.
7. விலைமனுக்கள் 90 நாட்களுக்கு (2024.12.10 ஆம் திகதி வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 170,000 ரூபா பெறுமதியுள்ளதும் இலங்கையில் செயற்படும் புகழ்பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியில் தயாரிக்கப்பட்டதுமானதும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2025.01.09 வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப் பிணைமுறியொன்றுடன் இணைக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2024.12.09 ஆம் திகதியன்று பிப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் வழங்கல் பிரிவு, 3 ஆம் மாடி, பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அவைகளை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைக்கான ஏற்பாடு - 2024/2025 - ஒப்பந்த இல.: 4/6/6/2024'' என குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மற்றும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழித்து அனைத்து விலைமனுக்களையும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதனால் அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டிற்கான காரணத்தை தெரிவிப்பதற்கு எவ்வித பொறுப்பையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
22.08.2024

The Housewives' companion
Classifieds on
Daily News

# சுகாதார சேவைகள் திணைக்களம்
## தென் மாகாணம்

## தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவைகள் மற்றும் தனியார் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல்

**2024/ 2025ஆம் வருடம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

2024/2025ஆம் வருடங்களில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவைகள் மற்றும் தனியார் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகைமைகளுடன் கூடிய நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

1. இலங்கையின் வியாபாரப் பெயர்ப் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு / பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனமாக பதிவு செய்து 03 வருட காலம் சேவை வழங்கியுள்ள நிறுவனமாகவிருத்தல் வேண்டும். தென் மாகாணத்திற்கு வெளியில் வழங்குநர்கள் கேள்விகளைச் சமர்ப்பிப்பதாயின் சேவையை வழங்கும் வசதிக்காக அந்நிறுவனத்தின் கிளை அலுவலகம் தென் மாகாணத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
2. 2024-08-23ஆம் திகதி முதல் 2024-09-11ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களில் இதற்கு இயைபான தகவல்கள் மற்றும் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்கையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்தின் பொருட்டும் வெவ்வேறாக அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத மற்றும் மீளளிக்கப்படும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பத்தை ஒப்படைக்கும் போது திணைக்களத்தின் பிரதான கணக்காளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   - I. வியாபார பெயர்ப் பதிவுச் சான்றிதழ்
   - II. 03 வருட கால அனுபவம் தொடர்பான சான்றிதழ்

   சேவைகள் வழங்க எதிர்பார்க்கும் ஒவ்வொரு நிறுவனத்தின் பொருட்டும் 05 இலட்சம் ரூபாவுக்குக் குறையாத பெறுமதிச் சான்றிதழை பொது 170 மாதிரியில் பிரதேச செயலாளரிடம் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை 2024.09.12ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் ஆவணங்களை வழங்கிய நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கொண்டு வந்து உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024/2025ஆம் வருடத்திற்கான தனியார் பாதுகாப்பு சேவைகள் மற்றும் தனியார் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல்'' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
4. விலைமனு ஆவணங்கள் இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிடப்பட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2024-09-12ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளலாம்.
6. சகல விலைமனுக்களும் 2024-09-12ஆம் திகதி திறக்கப்பட்டாலும், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் கேள்விகள் கையளிக்கப்படுவதானது முன்னர் நடைமுறையிலுள்ள ஒப்பந்தம் நிறைவடையும் நாள் முதலாகும்.
7. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு கொண்டுள்ளது.

**தலைவர்,**
**மாகாண பெறுகைக் குழு,**
**தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி.**

**அட்டவணை - I**

| தொ. இல. | தனியார் பாதுகாப்புச் சேவை | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத பிணை வைப்புத் தொகை | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - காலி | ரூபா 20,000/- | ரூபா 2,500/- | தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி. தொ.பே. 091-2231620 |
| 02 | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவு - காலி | ரூபா 40,000/- | ரூபா 2,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், காலி. தொ.பே. 091-2223439 |
| 03 | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மாத்தறை | ரூபா 20,000/- | ரூபா 2,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மாத்தறை தொ.பே. 041-2222884 |
| 04 | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் மலேரியா கட்டுப்பாட்டு அதிகாரி அலுவலகம் - ஹம்பாந்தோட்டை | ரூபா 40,000/- | ரூபா 2,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை. தொ.பே. 047-2220358 |
| 05 | ஆதார வைத்தியசாலை, எல்பிட்டிய | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, எல்பிட்டிய தொ.பே. 091-2291261 |
| 06 | ஆதார வைத்தியசாலை, உடுகம | ரூபா 75,000/- | ரூபா 7,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், காலி. தொ.பே. 091-2223439 |
| 07 | ஆதார வைத்தியசாலை, தெனியாய | ரூபா 70,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, தெனியாய தொ.பே. 041-2273261 |
| 08 | ஆதார வைத்தியசாலை, பலப்பிட்டிய | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, பலப்பிட்டிய தொ.பே. 091-2258261 |
| 09 | ஆதார வைத்தியசாலை, தங்காலை | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, தங்காலை தொ.பே. 047-2340261 |
| 10 | ஆதார வைத்தியசாலை, கம்புறுப்பிட்டிய | ரூபா 80,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, கம்புறுப்பிட்டிய தொ.பே. 041-2292261 |
| 11 | ஆதார வைத்தியசாலை, வலஸ்முல்ல | ரூபா 10,000/- | ரூபா 7,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை தொ.பே. 047-2220358 |
| 12 | ஆதார வைத்தியசாலை, திஸ்ஸமஹாராம | ரூபா 70,000/- | ரூபா 7,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை தொ.பே. 047-2220358 |
| 13 | உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவு - காலி | ரூபா 10,000/- | ரூபா 2,500/- | தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி. தொ.பே. 091-2231620 |

**அட்டவணை - II**

| தொ. இல. | தனியார் சுத்திகரிப்புச் சேவை | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத பிணை வைப்புத் தொகை | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் நிறுவனம் |
|---|---|---|---|---|
| 01 | ஆதார வைத்தியசாலை, எல்பிட்டிய | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, எல்பிட்டிய தொ.பே. 091-2291261 |
| 02 | ஆதார வைத்தியசாலை, உடுகம | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், காலி. தொ.பே. 091-2223439 |
| 03 | ஆதார வைத்தியசாலை, தெனியாய | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மாத்தறை. தொ.பே. 041-2222884 |
| 04 | ஆதார வைத்தியசாலை, பலப்பிட்டிய | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, பலப்பிட்டிய தொ.பே. 091-2258261 |
| 05 | ஆதார வைத்தியசாலை, தங்காலை | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, தங்காலை தொ.பே. 047-2340261 |
| 06 | ஆதார வைத்தியசாலை, கம்புறுப்பிட்டிய | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | ஆதார வைத்தியசாலை, கம்புறுப்பிட்டிய தொ.பே. 041-2292261 |
| 07 | ஆதார வைத்தியசாலை, வலஸ்முல்ல | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை. தொ.பே. 047-2220358 |
| 08 | ஆதார வைத்தியசாலை, திஸ்ஸமஹாராம | ரூபா 100,000/- | ரூபா 7,500/- | மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், ஹம்பாந்தோட்டை தொ.பே. 047-2220358 |
| 09 | சுகாதார பயிற்சி நிலையம் | ரூபா 10,000/- | ரூபா 2,500/- | தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி. தொ.பே. 091-2231620 |

## விலைமனுக்கோரல்

# தள வைத்தியசாலை கந்தளாய்

கந்தளாய் தள வைத்தியசாலை பின்வரும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்களை கோருவதற்கு வைத்தியசாலையின் பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் உபகரணங்களுக்கான முழுமையான ஒப்பந்தபத்திரம் (விலைமனுக்கள்) 2 பிரதிகளுடன் ஏற்றுக்கொள்ளப்படும்

| Bid No | Title of Bid | Amount of non-Refundable fee | Value of Bid Security | Estimated value (Mn) |
|---|---|---|---|---|
| BHK/AB/04/MPM/2024 | Supply of 04 Nos.ICU Multiparameter Monitor | 3,000.00 | 100,000.00 | 10 |
| BHK/AB/04/DMVS/2024 | Supply of 01 No.Electrosurgery with vessel Sealing System | 3,000.00 | 70,000.00 | 7 |
| BHK/AB/04/HDM/DU/2024 | Supply of 01 No.Hemodialysis Machine | 2,000.00 | 35,000.00 | 3.5 |

1. இதற்காக காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விப்பத்திரம் முன் வைக்கப்படல் வேண்டும்.
2. ஒப்பந்த (விலைமனுக்கள்) பத்திரம் மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் 2024.08.22 இருந்து 2024.09.10 வரை மு.ப 9.00 இல் இருந்து பி.ப 2.00 வரை வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. 2024.09.11 பி.ப 2.00 க்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதோடு அதற்கு முதல் பெறும் வகையில் விலைமனுக்கள் "தலைவர், மீள்நிர்மாண பணிக்குழு, தள வைத்தியசாலை கந்தளாய்" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பமுடியும். இல்லையெனில் கந்தளாய் தள வைத்தியசாலையின் காரியாலயத்திற்கு கொண்டு வந்து தரமுடியும். குறித்த நேரத்திற்கு பின் கிடைக்கும் (டென்டர்) ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த பத்திரம் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரர் or அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகளிக்க முடியும்.
4. கேள்விமனுக்களைக் கொண்ட கடித உறையின் மேல் இடது மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் குறித்த பணி தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. கேள்வி விலைமனு 2024.09.11 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு திறக்கப்படும்.
6. ஏலத்திற்கு முந்தைய கூட்டம் 2024.09.02 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு நடைபெறும்.

எந்தவொரு கேள்விமனுவையும் ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக் குழுவிற்கு உண்டு.

மேலதிக விபரம்:- 026-2234945,076-8178300

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தள வைத்தியசாலை,**
**கந்தளாய்**

## பெறுகை அறிவித்தல்

### ஹோமாகம பிரதேச சபை

### கந்தனவத்த சமகி மாவத்தை எஞ்சிய பகுதியை காப்பட் இட்டு மேம்படுத்தல் மற்றும் மீகொட வடக்கின் மீகொடதெனிய கிராமத்தின் 9 ஆவது ஒழுங்கை மேம்படுத்தல்

01. மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்காக கீழ் குறிப்பிடப்பிடப்பட்டிருக்கும் தகுதியை பூர்த்தி செய்துள்ள விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய போட்டிரீதியான முறையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| திட்டத்தின் பெயர் | ஒப்பந்தத் தொகை (ரூபா) | CIDA தரம் | மீளளிக்கப்படாத வைப்பு | விலைமனு பிணை அல்லது பண வைப்பு | விலைமனு பிணை காலம் | ஒப்பந்தக் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| மீகொட வடக்கின் மீகொடதெனிய கிராமத்தின் 9 ஆவது ஒழுங்கை மேம்படுத்தல் | 6,226,490.13 | C6 அல்லது C7 | 12,500.00 | 60,000.00 (பணம்) 120,000.00 (வங்கி பிணை) | 44 | 90 நாட்கள் |
| கந்தனவத்த சமகி மாவத்தை எஞ்சிய பகுதியை காப்பட் இட்டு மேம்படுத்தல் | 7,490,797.03 | C6 அல்லது C7 | 12,500.00 | 75,000.00 (பணம்) 150,000.00 (வங்கி பிணை) | 44 | 90 நாட்கள் |

03. விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது அல்லது மாகம பிரதேச சபைக்கு மேலுள்ளவாறு பணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட மாதிரிப் படிவத்தை மூலப் பிரதி, நகல் பிரதி என வெவ்வேறாக பிரித்து வெவ்வேறு உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு விலைமனுக்கள் "செயலாளர் ஹோமாகம பிரதேச சபை முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.
04. சமர்ப்பிக்கப்படும் விலைமனு பிணைமுறி அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றினால் பெற்றுக்கொண்ட வங்கிப் பிணை அல்லது பணமாக இருத்தல் வேண்டும். குறித்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கின்ற கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச சபை வசமானதாகும். மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் 011-2855230 என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைத்து பணி அதிகாரியிடம் கேட்டறிந்துகொள்ள முடியும்.
05. விலைமனுக்களை ஏற்கும் இறுதி நேரம் முடிவுற்ற உடன் வருகை தந்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஹோமாகம பிரதேச சபை முதல் மாடியில் கூட்ட அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

| | |
|---|---|
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பது விலைமனுக்களை ஏற்றல்** | 2024.08.23 ஆம் திகதி தொடக்கம் 2024.09.25 ஆம் திகதி வரை மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரை |
| **விலைமனுக்களை திறப்பது** | 2024.09.30 ஆம் திகதி பி.ப. 2.00க்கு |

**கே.பி.டீ. குமுதுனி குணதிலக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**ஹோமாகம.**

தொலைபேசி இலக்கம்: 011 – 2855230
தொலைநகல் இலக்கம்: 011 – 2857169
திகதி: 2024.08.22

### இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல் 2024/2025

01. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2024/2025 ஆம் ஆண்டிற்கான துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

    மேலதிக விபரங்கள் மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனுக்களை சமர்பிக்கும்போது மனுப்பாதுகாப்பு கட்டணமாக **ரூ.100,000/-** ஐ செலுத்துதல் வேண்டும்.
02. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
03. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் **276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள தலைமை அலுவலக கட்டிடத்தில், ஹன்தானை (கண்டி), கதிரான (நீர்கொழும்பு) அதிர்வெண் சோதனைச் சாவடிகள் மற்றும் கொக்காவில் அமைந்துள்ள தொலைக்காட்சி / வானொலி ஒலிபரப்பு நிலையதிற்காக ஒருவருட காலத்திற்கான துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை** வழங்குதல்.
04. அதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் **பணிப்பாளர் (நிர்வாகம்), நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரியில் அல்லது **0112673486** எனும் தொலைபேசிக்கு அழைப்பதன் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதுடன் **2024.08.22** ஆம் திகதி தொடக்கம் **2024.09.10** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.02.00** மணி வரை நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவில் மனு ஆவணங்களை பரீசீலனை செய்வதன் மூலம் மனு தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.
05. இதற்காக ஆர்வமுள்ள மனுதாரர்கர் மீள் செலுத்தப்படாத **ரூ.3,000/-** கட்டணத்தை செலுத்துவதன் மூலம் **2024.08.22** ஆம் திகதி முதல் **2024.09.10** ஆம் திகதி **பி.ப.03.00** மணி வரை நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவில் முகவரி அச்சிடப்பட்ட அஞ்சல்தாள் மூலம் சமர்ப்பித்து பூரணபடுத்தப்பட வேண்டிய மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
06. மனுக்கள் **2024.09.11** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **நிர்வாகம் மற்றும் மனிதவளப்பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைப்பதன் மூலமாகவோ அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். மனு அடங்கிய கடிதஉறையின் மேல் இடது பக்க மூலையில் **"துப்புரவு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல் 2024/2025"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். இம்மனுக்கோரல் தொடர்பாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதி தீர்மானமாகும்.

தலைவர்,
**திணைக்கள வழங்கல் குழு (தலைமை),**
**இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
இல-276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 8.

SELACINE

## பெறுகை அறிவித்தல்

# போதனா வைத்தியசாலை - குருநாகல்

குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவினால் பின்வரும் மருத்துவ / சத்திரசிகிச்சை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| # | இலக்கம் | மருத்துவ உபகரணங்கள் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப் படாத விலைக் கோரல் ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | THK/FS02/2024/19 | OCT Scan Machine | 1 | 300,000.00 | 10,000.00 |
| 02 | THK/FS02/2024/20 | Echocardiography Machine | 1 | 200,000.00 | 8,000.00 |
| 03 | THK/FS02/2024/21 | Ultrasound Scan Machine | 2 | 160,000.00 | 6,000.00 |
| 04 | THK/FS02/2024/22 | Neonatal Ventilator with high frequency facility | 1 | 150,000.00 | 6,000.00 |
| 05 | THK/FS02/2024/23 | Spot Lamp | 1 | 2,000.00 | 1,000.00 |
| 06 | THK/FS02/2024/24 | Multipara Monitor - ICU | 1 | 40,000.00 | 1,500.00 |
| 07 | THK/FS02/2024/25 | Patient Warmer | 1 | 6,000.00 | 1,000.00 |

02. இதன் பொருட்டு தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபை NMRA பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ள நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒரு விண்ணப்பப் படிவத்தின் பொருட்டு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை இந்த வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் இயைபுடைய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தொழில்நுட்ப விபரக்குறிப்புகளை கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2024.09.10 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை மட்டும் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.
03. 5,000,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான விலைமனுக்களுக்கு PCA3 சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வரையில் எந்தவொரு அரசாங்க வங்கியிலோ அல்லது தனியார் வங்கியிலோ வைப்புச் செய்து விலைமனுப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. சகல விண்ணப்பப் படிவங்களும் 2024.09.11 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல் எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் இந்த வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உபகரணத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. இது தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024.09.02 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.
07. 2024.09.11 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வைத்தியசாலையின் புதிய கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுமென்பதுடன் அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
08. இந்தக் கேள்வி தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
09. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் 037-2222261 நீடிப்பு 2261 எனும் தொலைபேசி இலக்கத்தில் கணக்குப் பிரிவைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (இந்த அறிவித்தல் www.kurunegalahospital.health.gov.lk எனும் வைத்தியசாலையின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**


Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want

Classified




For 15 Words Rs. 800/-

* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383

Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291

Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

# வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் |
|---|---|
| RDA/RM&M/NP/RMT-F/2024-01A | Supply of Dense Graded Aggregate Base Course (DGABC) on Valukkaiyaru – Punkuduthivu-Kurikadduvan Road [AB 039] (16+000 – 17+500 km) |
| RDA/RM&M/NP/RMT-F/2024-02A | Supply of Dense Graded Aggregate Base Course (DGABC) on Valukkaiyaru – Punkuduthivu-Kurikadduvan Road [AB 039] (17+500 – 19+000 km) |
| RDA/RM&M/NP/RMT-F/2024-03A | Supply of Gravel on Valukkaiyaru – Punkuduthivu-Kurikadduvan Road [AB 039] (16+000 – 19+000 km) |

தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் மேற்படி வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2024 ஒகஸ்ட் 22 முதல் 2024 செப்டெம்பர் 02 வரை RDA மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk மற்றும் www.mohsl.gov.lk என்பவற்றை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு (வடமாகாணம்)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# கேள்விகோரல் அறிவித்தல்

**விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**காலநடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**01. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெற முடியாத கட்டணம் (ரூபா) | விலைமனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | போவின் மடியழற்சி நோய் கட்டுப்பாட்டு கருத்திட்டக் கொள்வனவு விஷேட கருத்திட்டம் 2024 | 70,000.00 | 3,500.00 | 2024.08.22 முதல் 2024.09.11 வரை | 2024.09.12 11.00 மு.ப. |
| 1.2 | சோதனைக் கருவிகளின் கொள்வனவு | 50,000.00 | 3,500.00 | | |
| 1.3 | AI உபகரணக் கொள்வனவு வடமத்திய மாகாணம் - 2024 | 100,000.00 | 3,500.00 | | |
| 1.4 | இறக்குமதி செய்யும் போவின் உறைந்த விந்து கொள்வனவு வடமத்திய மாகாணம் - 2024 | 400,000.00 | 8,000.00 | | |
| 1.5 | காதடையாளம் 150,000 மற்றும் மார்க்கர் பேனா 500 கொள்வனவு - 2024 | 191,500.00 | 5,000.00 | | |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுல் இடலாம். விலை மனுக்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விடயத்தின் பெயரையும் மற்றும் விடயத்தின் இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இணையத்தளத்தை பார்வையிடவும் (www.daph.gov.lk)

**பணிப்பாளர் நாயகம்/தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020,**
**த.பெ.இலக்கம் - 13**
**கெட்டம்பே,**
**பேராதனை**

**தொலைபேசி இல** **081-2388197/081-2385227**
**081-2388120/081-2388189**
**081-2385701**
**நீடிப்பு - 290/291**

# விலைமனு அறிவித்தல்

சுகாதார அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் முறைமையின் கீழ் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் 2024/2025

2024/2025 ஒரு வருட காலத்திற்கு சுகாதார அமைச்சின் கீழுள்ள பின்வரும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து சுகாதார அமைச்சின் அமைச்சு பெறுகை "F" குழுவின் தலைவரினால் விலைமனுக் கோரப்படுகின்றது.

1. இவ் ஒப்பந்தத்திற்காக பின்வரும் அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்துதல் வேண்டும்.
   I. இலங்கையின் வியாபாரப் பெயர் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாக பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட தினத்திற்கு குறைந்த பட்சம் ஒரு வருடத்திற்கு முன்னர் பதிவு செய்யப்பெற்ற நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.
   II. சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் தொடர்பாக அரச/ அரை அரச நிறுவனங்கள் அல்லது தனியார் வைத்தியசாலையொன்றினால் குறைந்த பட்சம் ஒரு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஒப்பந்தத்தை வழங்கிய கடிதத்துடன் சேவை வழங்கிய நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   III. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழான பதிவுச் சான்றிதழ் (அந்தந்த வைத்தியசாலைகள்/ நிறுவனங்களிற்காகத் தனித்தனியாக பதிவுச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)
   IV. கீழ்க்குறிப்பிடப்படும் ஒவ்வொரு வைத்தியசாலை/ நிறுவனங்களிற்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்திற்கான நிபந்தனைகளற்ற வங்கி மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஒப்பந்தக்காரர் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வங்கியினால் வழங்கப்பட்ட கடிதம் (மூலப்பிரதி) ஒப்பந்தக்காரார் வைத்தியசலைகள்/ நிறுவனங்கள் பலவற்றிற்கு விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதாயின் அவ்வைத்தியசாலைகள்/ நிறுவனங்களின் பெறுமானத்திற்கான கூட்டுத் தொகைக்குச் சமமான அல்லது மேற்பட்ட பெறுமானத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றாக இருத்தல் வேண்டும். (விலைமனுத் திறக்கப்படும் தினத்திற்கு முன்னர் ஒரு மாதத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்றாக இருத்தல் வேண்டும்.)
   V. அண்மித்த ஆண்டுக்கான தம் வியாபாரப் பதிவுப் பெயரின் கீழ் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் தொடர்பாக பணியிலமர்த்தப்பட்ட மொத்த ஊழியர்கள் சார்பாக ஊழியர் சேமநல நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளனவென இலங்கை மத்திய வங்கி/ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட கடிதங்கள்/ பற்றுச்சீட்டுக்கள்/ பணம் அனுப்பிய அறிவித்தல்கள் (கிட்டிய 12 மாதங்களிற்கானவை)
   VI. அண்மித்த மதிப்பீட்டாண்டிற்கான சுத்திகரிப்பு நிறுவனமொன்றென பெயரில் வெட்/ வருமான வரி செலுத்தப்பட்டுள்ளதென்பதனை ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றெனின், கம்பனியின் பெயரிலும் தனிநபர்/ கூட்டு வியாபார நிறுவனமானது அனைத்து பங்குதாரர்களினதும் பெயரிலும் அண்மித்த ஆண்டிற்கான வருமான வரி, வெட் வரி செலுத்தியுள்ளவாறு ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2022/2023 ஆண்டுக்காக மாத்திரம்).
   VII. ரூபா ................................ இற்கான விலைமனுப் பிணையமொன்று அல்லது இலங்கை மத்திய வங்கி அனுமதித்துள்ள நிதி நிறுவனமொன்றிலிருந்து/ காப்புறுதி நிறுவனமொன்றிலிருந்து கொழும்பு-10, வண. பத்தேகம விமலவங்ஸ ஹிமி மாவத்தை, சுவசிரிபாய, 385, என்ற முகவரியிலுள்ள சுகாதார அமைச்சின் செயலாளரின் பெயரில் வரையப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திலிருந்து 119 நாட்களிற்குச் செல்லுபடியாகும் தன்மையில் பெற்றுக்கொள்ளப்படும் விலைமனுப்பிணையமொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2024.09.12 முதல் 2025.01.08 வரை செல்லுபடியாதல் வேண்டும். காசாக வழங்கப்படுவதாயின் கேள்விப்பிணை பெறுமதியில் 50% பெறுமதியாக இருத்தல் வேண்டும்.
2. 2024.08.12 முதல் 2024.09.11 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இல. 26, 2ஆம் மாடி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 என்ற முகவரியிலுள்ள சுகாதார அமைச்சின் (உப அலுவலகம்) பெறுகைப் பிரிவில் இதற்கான விலைமனு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக மீளளிக்கப்படாத அந்தந்த வைத்தியசாலைகள்/ நிறுவனங்களிற்கான கீழ்க்காணப்படும் கட்டணங்களை சுகாதார அமைச்சின் சிறாப்பர் பிரிவில் காசாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் எழுத்துருவ விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| தொ. இல. | வைத்தியசாலையின் பெயர் | பெறுகை இலக்கம் | வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக் கொள்ள வேண்டிய குறைந்த பெறுமதி (ரூ) | கேள்விப் பிணை (ரூ) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தேசிய வைத்தியசாலை - 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 59, NQ (புனித பீட்டர்) லொன்டரியின் பராமரிப்பு களஞ்சிய தொகுதி, சரும நோய் ஒசுசல, H ஓவசியர் அலுவலகம், ECG, விஷ தகவல்கள் சுகாதாரப் பணிப்பாளர், MIUDU, CECB உட்படும் பிரதேசம் | MH/PB/12/CL-C2/01/2024 | 9,154,229.68 | 549,260.00 | 12,500.00 |
| 02 | இலங்கை தேசிய வைத்தியசாலை - மூன்றாம் மருத்துவ வாட்டுக் கட்டிடத் தொகுதி அடங்கும் பிரதேசம் | MH/PB/12/CL-C2/02/2024 | 6,014,981.50 | 360,900.00 | 3,500.00 |
| 03 | இலங்கை தேசிய பல் வைத்தியசாலை | MH/PB/12/CL-C2/03/2024 | 3,646,589.39 | 218,800.00 | 3,500.00 |
| 04 | சுகாதார அமைச்சு இணைந்த நிறுவனம் (உயிரியல் மருத்துவம், பொறியியல் சேவை பிரிவு உட்பட) | MH/PB/12/CL-C2/04/2024 | 6,866,135.96 | 411,970.00 | 3,500.00 |
| 05 | அம்பாறை பொது வைத்தியசாலை | MH/PB/12/CL-C2/05/2024 | 27,042,555.52 | 1,622,560.00 | 20,000.00 |
| 06 | ஆதார வைத்தியசாலை அக்கரைப்பற்று | MH/PB/12/CL-C2/06/2024 | 7,378,137.64 | 442,690.00 | 3,500.00 |
| 07 | அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை | MH/PB/12/CL-C2/07/2024 | 14,782,188.06 | 886,940.00 | 12,500.00 |
| 08 | வாய்ச் சுகாதார நிறுவனம் - மஹரகம | MH/PB/12/CL-C2/08/2024 | 1,220,019.85 | 73,210.00 | 1,000.00 |
| 09 | இலங்கை தேசிய வைத்தியசாலை - பண்டாரநாயக்க கட்டிடம் மற்றும் சுற்றுச் சூழல் பிரதேசம் | MH/PB/12/CL-C2/09/2024 | 7,832,636.34 | 469,960.00 | 3,500.00 |
| 10 | இலங்கை தேசிய வைத்தியசாலை - புதிய வெளி நோயாளர் பிரிவு அடங்கும் பிரதேசம் | MH/PB/12/CL-C2/10/2024 | 17,186,311.67 | 1,031,180.00 | 20,000.00 |
| 11 | சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை- கொழும்பு-08 | MH/PB/12/CL-C2/11/2024 | 29,396,996.82 | 1,763,820.00 | 20,000.00 |
| 12 | சிறுநீரக ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று தேசிய மத்திய நிலையம், மாளிகாவத்தை, கொழும்பு-10 | MH/PB/12/CL-C2/12/2024 | 3,423,387.59 | 205,410.00 | 3,500.00 |
| 13 | தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் | MH/PB/12/CL-C2/13/2024 | 892,552.70 | 53,560.00 | 1,000.00 |
| 14 | போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் | MH/PB/12/CL-C2/14/2024 | 30,819,596.78 | 1,849,180.00 | 20,000.00 |
| 15 | மாவட்ட பொது வைத்தியசாலை - எம்பிலிப்பிட்டிய | MH/PB/12/CL-C2/15/2024 | 9,201,395.55 | 552,090.00 | 12,500.00 |
| 16 | தேசிய வைத்தியசாலை - கண்டி | MH/PB/12/CL-C2/16/2024 | 54,480,451.13 | 3,268,830.00 | 35,000.00 |
| 17 | போதனா வைத்தியசாலை, மஹமோதர - காலி | MH/PB/12/CL-C2/17/2024 | 5,157,567.81 | 309,460.00 | 3,500.00 |
| 18 | சட்ட மருத்துவ மற்றும் விஷ வைத்திய நிறுவனம் - கொழும்பு-10 | MH/PB/12/CL-C2/18/2024 | 703,309.04 | 42,200.00 | 1,000.00 |
| 19 | ஆதார வைத்தியசாலை, கல்முனை (வடக்கு) | MH/PB/12/CL-C2/20/2024 | 19,716,996.97 | 1,183,020.00 | 20,000.00 |
| 20 | பொது சுகாதார கட்டிடத் தொகுதி (மலேரியா தடை இயக்கம் உட்பட ஏனைய நிறுவனங்கள்) | MH/PB/12/CL-C2/21/2024 | 1,031,566.94 | 61,900.00 | 1,000.00 |
| 21 | தேசிய குருதி பரிமாற்று சேவை நாரஹேன்பிட்ட | MH/PB/12/CL-C2/22/2024 | 1,950,917.75 | 117,060.00 | 3,500.00 |
| 22 | பொது வைத்தியசாலை - ஹம்பாந்தோட்டை | MH/PB/12/CL-C2/23/2024 | 17,991,829.70 | 1,079,510.00 | 20,000.00 |
| 23 | தொழு நோய் வைத்தியசாலை, ஹெந்தளை | MH/PB/12/CL-C2/24/2024 | 1,369,460.38 | 82,170.00 | 1,000.00 |
| 24 | போதனா வைத்தியாசலை - பேராதனை | MH/PB/12/CL-C2/25/2024 | 10,185,437.25 | 611,130.00 | 12,500.00 |
| 25 | பல் வைத்தியசாலை- பேராதனை | MH/PB/12/CL-C2/26/2024 | 1,597,729.14 | 95,870.00 | 1,000.00 |
| 26 | பொது வைத்தியசாலை, பொலன்னறுவை | MH/PB/12/CL-C2/27/2024 | 19,413,438.30 | 1,164,810.00 | 20,000.00 |
| 27 | ஆதார வைத்தியசாலை, கந்தளாய் | MH/PB/12/CL-C2/28/2024 | 6,370,682.12 | 382,250.00 | 3,500.00 |
| 28 | சுவாச நோய்களிற்கான தேசிய வைத்தியசாலை - வெலிசரை | MH/PB/12/CL-C2/29/2024 | 6,635,884.63 | 398,160.00 | 3,500.00 |
| 29 | பொது வைத்தியசாலை - களுத்துறை | MH/PB/12/CL-C2/30/2024 | 19,727,913.43 | 1,183,680.00 | 20,000.00 |
| 30 | மாவட்ட வைத்தியசாலை - கந்தானை | MH/PB/12/CL-C2/31/2024 | 5,035,100.88 | 302,110.00 | 3,500.00 |
| 31 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம - தாதியர் கல்லூரி, கந்தானை | MH/PB/12/CL-C2/32/2024 | 2,014,935.49 | 120,900.00 | 3,500.00 |
| 32 | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | MH/PB/12/CL-C2/33/2024 | 25,187,426.84 | 1,511,250.00 | 20,000.00 |
| 33 | புனர்வாழ்வு வைத்தியசாலை - ராகம | MH/PB/12/CL-C2/34/2024 | 6,435,182.06 | 386,120.00 | 3,500.00 |
| 34 | தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் - அங்கொடை | MH/PB/12/CL-C2/35/2024 | 7,550,078.73 | 453,010.00 | 3,500.00 |
| 35 | தேசிய ஊடுபகுப்பு விசேட வைத்தியசாலை பொலன்னறுவை | MH/PB/12/CL-C2/36/2024 | 6,576,651.46 | 394,600.00 | 3,500.00 |

3. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2024.09.12 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “தலைவர், அமைச்சின் பெறுகைக்குழு "F" சுகாதார அமைச்சு (உப அலுவலகம்), 2ஆம் மாடி, இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது சுகாதார அமைச்சு, உப அலுவலகத்தின் 2ஆம் மாடியின் மேலதிக செயலாளர் (பெறுகை)இன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் சேர்த்தல் அல்லது ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். விலைமனுக்களை அடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “2024/2025 ஆண்டில்.............................. வைத்தியசாலை/நிறுவனத்திற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல்” எனக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
4. சுகாதார அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக முன்வைக்கப்படும் விலைமனுக்கள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும், தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், நிறுவனங்கள் பலவற்றிற்காக விண்ணப்பிப்பதாயின் அதற்காக விண்ணப்பிக்கும் ஆவணங்களின் மூலப்பிரதியானது, விலைமனு ஒன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அது எந்த விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென ஏனைய விலைமனுக்களில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். ஏனைய விலைமனுக்களுடன் மூலப்பிரதிகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு தனித்தனி உறைகளில் சேர்த்து அவற்றை ஒருறையில் உள்ளிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
6. 2024.09.12 அன்று மு.ப. 10.00 வரை இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10, சுகாதார அமைச்சு உப அலுவலக இரண்டாம் மாடியிலுள்ள மேலதிக செயலாளர் (பெறுகை) அலுவலகத்தில் பெறுகை ஏற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுற்றதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். மேலதிக விபரங்களிற்காக மேலதிக செயலாளர் (பெறுகை) ஐ அழைக்கவும். (தொ.பே. இல. 011-2112713, 011-2112717.
7. விலைமனு முன்னோடிக் கூட்டமானது, 2024.08.28 அன்று மு.ப. 10.00 இற்கு சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்) இலக்கம் 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10 இன் மேலதிக செயலாளர் (பெறுகை) அலுவலகத்தில் நடைபெறும்.
8. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக் குழு "F"**
**பெறுகைப் பிரிவு,**
**சுகாதார அமைச்சு (புதிய கட்டிடம்)**
**இரண்டாம் மாடி, இலக்கம் 26,**
**ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.**

# இலங்கை கால்பந்து அணிக்கு புதிய பயிற்சியாளர் நியமனம்

கம்போடியாவுக்கு எதிரான ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டிகளுக்கு இலங்கை கால்பந்து அணியின் இடைக்கால பயிற்சியாளராக நேபாள அணியின் முன்னாள் பயிற்சியாளர் அப்துல்லா அல்முத்தைரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கால்பந்து சம்மேளனம் மற்றும் கட்டார் அஸ்பயர் வலயத்திற்கு இடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி அல்முத்தைரி உடன் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை அணியின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்கவுள்ளார்.



இலங்கை கால்பந்து அணி எதிர்வரும் செப்டெம்பர் 05 ஆம் திகதி கொழும்பிலும் செப்டெம்பர் 10 ஆம் திகதி கம்போடியாவிலும் ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டியில் கம்போடிய அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# காலி மெதங்கர, வித்தியாலோக்க வித்தி. ஹொக்கி அணிகள் வெற்றி

நியாகம விஜித மத்திய மகா வித்தியாலயத்தின் ஹொக்கி விளையாட்டு சங்கம் நடத்திய ஹொக்கி போட்டியில் ஏ குழுவின் ஆண்கள் பிரிவுக்கான தங்கப் பதக்கத்தை காலி மெதங்கர வித்தியாலயமும் பீ குழுவின் ஆண்கள் பிரிவுக்கான தங்கப்பதக்கத்தை காலி, வித்தியாலோக்க வித்தியாலயமும் வென்றன.

நியாகம தொழிற்பயிற்சி விளையாட்டரங்கில் மூன்று நாட்களாக நடைபெற்ற இந்த போட்டியில்



தென் மாகாணத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி 14, 20 ஆண், பெண் ஹொக்கி அணிகளைச் சேர்ந்த சுமார் 400 வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

# ஜெய் ஷா ஐ.சி.சி. தலைவராக வாய்ப்பு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷா சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் (ஐ.சி.சி.) புதிய தலைவராக நியமிக்கப்பட வாய்ப்பு அதிகரித்துள்ளது.



ஐ.சி.சி. தலைவராக உள்ள கிரெக் பார்க்ளே மூன்றாவது தவணைக்கு அந்தப் பதவிக்கு போட்டியிட எதிர்பார்க்கவில்லை என்று ஐ.சி.சி. பணிப்பாளர்களுக்கு வீடியோ மாநாட்டின் போது குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் நவம்பரில் அவருக்கு பதில் ஐ.சி.சி. தலைமை பொறுப்பை ஏற்பதில் ஜெய் ஷா விருப்பத்தை வெளியிட்டிருந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகனான ஜெய் ஷா ஜன்மோகன் டால்மியா (1997–2000) மற்றும் ஷரத் பாவர் (2010–2012) ஆகியோருக்குப் பின்னர் ஐ.சி.சி. தலைமை பொறுப்பை ஏற்கும் மூன்றாவது இந்தியராக இடம்பெறவுள்ளார்.

2020 ஆம் ஆண்டு தலைவராக நியமிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு மீண்டும் அந்தப் பதவிக்குத் தெரிவான பார்க்ளே எதிர்வரும் நவம்பருடன் முடியும் பதவிக் காலத்தின் பின் மீண்டும் போட்டியிடவில்லை என்று அறிவித்திருப்பதாக ஐ.சி.சி. பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் அடுத்த தலைவர் பதவிக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்குள் தற்போதுள்ள பணிப்பாளர்கள் பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் பரிந்துரைக்கப்படும் பட்சத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 2024 டிசம்பர் 1 ஆம் திகதி ஐ.சி.சி. புதிய தலைவர் பதவி ஏற்கவுள்ளார்.

35 வயதான ஜெய் ஷா தலைவராக நியமிக்கப்பட்டால் ஐ.சி.சி. தலைவராகும் இளம் வயதானவராக பதிவாவார்.

# இலங்கை தடுமாற்றம்



இங்கிலாந்து அணிக்கு எதிராக முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாறியது.

மான்செஸ்டரில் நேற்று (21) ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. எனினும் ஆரம்ப வீரர்களான நிஷான் மதுஷங்க (4) மற்றும் திமுத் கருணாரத்ன (2) ஒற்றை இலக்கத்துடன் வெளியேறிய நிலையில் அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் வந்த வேகத்தில் டக் அவுட் ஆனார்.

குசல் மெண்டிஸால் 24 ஓட்டங்களையே பெற முடிந்த நிலையில் தினேஷ் சந்திமால் 17 ஓட்டங்களுடன் விக்கெட்டை தாரைவார்த்தார். இதனால் இலங்கை அணி முதல் நாள் ஆட்டம் பகல் போசணத்திற்காக இடைநிறுத்தப்படும்போது 25 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 80 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இதன்போது இலங்கை அணிக்காக தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடுவதற்கு வேகப்பந்த வீச்சாளர் மிலான் ரத்னாயக்க வாய்ப்பு பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் அவர் இலங்கை அணிக்காக ஆடும் 166 ஆவது டெஸ்ட் வீரராக பதிவானர்.

டெஸ்ட் வாய்ப்புப் பெற்றதற்கான தொப்பியை போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் இலங்கை முன்னாள் வீரர் குமார் சங்கக்கார மிலான் ரத்னாயக்கவுக்கு வழங்கினார்.

## சர்வதேச செய்திகள்

# காசா போர் நிறுத்த முயற்சியில் முன்னேற்றம் இன்றி அமெரிக்கா திரும்புகிறார் பிளிங்கன்

## இஸ்ரேலின் தாக்குதல்களில் மேலும் பல பலஸ்தீனர்கள் பலி



காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு தவறிய நிலையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் நேற்று (21) பிராந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார். பரந்த அளவிலான போர் ஒன்றை தவிர்ப்பதற்கான கடைசி வாய்ப்பாக இது உள்ளது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

எனினும் காசாவில் இஸ்ரேல் நேற்றும் உக்கிர தாக்குதல்களை நடத்தியதோடு கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் முற்றுகையில் இருக்கும் அந்தப் பகுதியில் மேலும் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்த முன்மொழிவை ஏற்கும்படி ஹமாஸை வலியுறுத்திய பிளிங்கன், காசாவின் எதிர்காலம் தொடர்பில் இஸ்ரேலுடன் வெளிப்படையாக முரண்பாட்டார்.

காசாவில் போர் வெடித்த பின்னர் கடந்த 10 மாதங்களில் ஒன்பதாவது முறையாக பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்ட பிளிங்கன் கட்டார், எகிப்து மற்றும் இஸ்ரேலுக்கு பயணமானார். அந்தப் பயணங்களை முடித்துக் கொண்ட அவர் 'நேரம் முக்கியமானது' என்று வலியுறுத்தினார்.

'கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும், நல்லவர்களுக்கு மிக மோசமான விடயங்கள் நடக்கக் கூடும்' என்று நேற்று (21) டோஹாவில் இருந்து விமானத்தில் புறப்படும் முன்னர் குறிப்பிட்டார்.

'இது (போர் நிறுத்தம்) ஏற்படுத்தப்பட வேண்டும், எதிர்வரும் நாட்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். அதனை அடைவதற்கு நாம் முடியுமான அனைத்தையும் செய்வோம்' என்று அவர் போர் நிறுத்தம் தொடர்பில் குறிப்பிட்டார்.

போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு இடையூறாக இருக்கும் இடைவெளிகளை நிரப்பும் யோசனைகளை அமெரிக்கா முன்வைத்து வருவதோடு, கெய்ரோவில் இந்த வாரம் நடைபெறும் பேச்சுவார்த்தையில் பங்கேற்க ஹமாஸ் அமைப்பை அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இந்தப் பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவின் எகிப்துடனான எல்லையான பிலடல்பியா தாழ்வார பகுதியின் கட்டுப்பாட்டை தொடர்ந்து தக்கவைப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார். இந்த எல்லை பகுதியை இஸ்ரேல் ஹமாஸிடம் இருந்து கைப்பற்றியதோடு இங்குள்ள இரகசிய சுரங்கப்பாதை வழியாக ஆயுதங்கள் காசாவுக்கு கொண்டுவரப்படுவதாக இஸ்ரேல் கூறி வருகிறது.

காசாவில் இருந்து துருப்புகள் வாபஸ் பெறும் அட்டவணை மற்றும் இடம் தொடர்பில் இஸ்ரேலுடன் ஏற்கனவே இணக்கத்தை எட்டி இருப்பதாக பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் அங்கு இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பை தொடர்வதை அமெரிக்கா நிராகரித்திருப்பதாக நெதன்யாகுவின் கருத்துகள் தொடர்பில் பிளிங்கனிடம் செய்தியாளர்கள் கேட்டபோது அவர் குறிப்பிட்டார். நெதன்யாகுவின் வலுவான அறிக்கை போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு உதவாது என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

காசா எல்லை பகுதியை இஸ்ரேல் கைப்பற்றி இருப்பது தொடர்பில் இஸ்ரேலுடன் அமைதி உடன்படிக்கையை செய்து கொண்ட முதல் அரபு நாடான எகிப்து அதிருப்தி அடைந்துள்ளது.

இரு முஸ்லிம் புனிதத் தலங்களின் காவலாராக உள்ள சவூதி அரேபியா உட்பட அரபு உலகம் மற்றும் இஸ்ரேல் இடையே இயல்புநிலையை ஏற்படுவதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் நெதன்யாகுவை சமரசம் செய்ய பிளிங்கன் முயற்சித்தார்.



இந்நிலையில் பிளிங்கனை சந்தித்த எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி, 'போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நேரம் வந்துவிட்டது' என்றார்.

போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதில் ஹமாஸ் ஆர்வம் காட்டுகின்றபோதும் அமெரிக்காவின் புதிய போர் நிறுத்த முன்மொழிவில் இஸ்ரேல் முன்வைத்திருக்கும் புதிய நிபந்தனைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது.

எகிப்துடனான எல்லையில் அமைந்துள்ள தெற்கு காசாவில் ரபா நகர் மீது இஸ்ரேலியப் படை நேற்றுக் காலை சரமாரியாக குண்டுகளை வீசியது. இதன்போது நான்கு சடலங்களை மீட்டதாக சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரபா நகரின் மேற்கே அல் மவாசியில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கி இருக்கும் கூடாரங்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் உள்ள அல் காதிப் குடும்பத்திற்குச் சொந்தமான வீட்டுன் மீது நேற்று இடம்பெற்ற வான் தாக்குதல் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வின் பல சுற்றுப்புறங்களில் இருந்து மக்களை வெளியேற இஸ்ரேல் இராணுவம் நேற்று புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த நகரின் தெற்கு பகுதியில் பல இடங்களும் 'அபாயகரமான போர் வலயம்' என்பதை காட்டும் வரைபடம் ஒன்றை இஸ்ரேல் இராணுவம் எக்ஸ் சமூக தளத்தில் வெளியிட்டுள்ளது.

அங்குள்ள போராளிகளுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் மக்கள் மேற்கு பக்கமாக உடன் வெளியேற வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நாம் எங்கே போவது? எங்கே தான் போவது?' என்று வடக்கு காசாவில் உள்ள காசா நகரில் இருந்து வந்த 55 வயது அபூரக்கன் என்பவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். அவர் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஐந்து முறை இடம்பெயர்ந்துள்ளார்.

'அவர்கள் எம்மை நெருங்கி வருகிறார்கள் என்று உணர்கிறேன். அச்சுறுத்தல் பகுதிக்கு சில நூறு மீற்றர் தூரத்தில் நான் இருக்கிறேன். காலை தொடக்கம் டெயிர் அல் பலாஹ், கான் யூனிஸ் அல்லது நுஸைரத்தில் எஞ்சியுள்ள இடத்தை நான் தேடி வருகிறேன்' என்று சாட் செயலி வழியாக கருத்துக் கூறிய போதும் அவர் தெரிவித்தார்.

'துரதிருஷ்டவசமாக இந்தப் போரின் முடிவைக் காண்பதற்கு முன் நாம் இறக்கக்கூடம். போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் எல்லாமே பொய்யானது' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 50 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. கடந்த 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தல் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 40,223 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 92,981 பேர் காயமடைந்துள்ளர்.

காசா போர் பிராந்தியத்தில் பதற்றத்தை அதிகரித்திருக்கும் சூழலில் தெற்கு லெபனானின் சிடோன் நகரில் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல் ஒன்றில் மேற்குக் கரையில் ஆட்சி புரியும் பத்தா அமைப்பின் அதிகாரியான கலீல் மகாதா கொல்லப்பட்டுள்ளார்.

மகாதா மற்றும் அவரது சகோதரரான மூத்த பத்தா உறுப்பினர் முனீர் ஆகியோர் லெபனானில் இருந்து ஈரான் புரட்சிக் காவல் படையுடன் இணைந்து செயற்படுவதாகவும் மேற்குக் கரைக்கு பணம் மற்றும் ஆயுதங்களை கடத்துவதாகவும் இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது.

# ஈரானில் யாத்திரிகர் பஸ் கவிழ்ந்து 28 பேர் பலி



பாகிஸ்தான் யாத்திரிகர்களுடன் சென்ற பஸ் வண்டி ஒன்று ஈரானில் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் குறைந்தது 28 பயணிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

பஸ் வண்டியின் பிரேக் அமைப்பில் ஏற்பட்ட கோளாறை அடுத்தே ஈரானின் யாசித் மாகாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றிருப்பதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியந்துள்ளது.

மேலும் 23 பயணிகள் காயமடைந்திருப்பதோடு அவர்களில் 14 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக ஈரான் நாட்டுக்கான பாகிஸ்தான் தூதுவர் முஹமது மதிசிர் டிப்பு, பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்த யாத்திரிகர்கள் பாகிஸ்தானின் சிந்த் மாகாணத்தில் இருந்து ஷியா முஸ்லிம்களின் முக்கிய நிகழ்வு ஒன்றில் பங்கேற்க ஈராக்கின் புனித நகரான கர்பலாவை நோக்கி பயணிக்கும் வழியிலேயே இந்த விபத்தை எதிர்கொண்டுள்ளனர். அதிவேகமாகச் சென்ற பஸ் கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி கவிழ்ந்திருப்பதோடு அதனை அடுத்து பஸ்ஸில் தீ பரவியுள்ளது.

# தாய்லாந்திலும் குரங்கம்மை

தாய்லாந்தில் ஆபிரிக்காவில் இருந்து கடந்த வாரம் வந்த ஐரோப்பியர் ஒருவரிடம் குரங்கம்மை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர் ஆபத்தான நோய் பிறழ்வினால் பதிக்கபட்டுள்ளாரா, என்பது குறித்து உறுதி செய்வதற்கு சோதனை முடிவுக்காக காத்திருப்பதாக அந்நாட்டு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடு ஒன்றில் இருந்து கடந்த ஓகஸ்ட் 14 ஆம் திகதி தாய்லாந்தை வந்தடைந்த 66 வயது நோயாளியிடமே குரங்கம்மை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் தொஹ்சாய் குறிப்பிட்டுள்ளார். அவர் தற்போது மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.



தாய்லாந்தில் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 800 குறங்கம்மை தொற்றுச் சம்பங்கள் பதிவாகியுள்ள போதும் வேகமாகப் பரவும் ஆபத்தான நோய் பிறழ்வு கண்டுபிடிக்கப்படவில்லை.

குரங்கம்மையை உலக பொது சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்த போதும், அந்த நோய்த்தொற்று மற்றொரு கொவிட்19 பரவலாக மாறிவிடாது என்று குறிப்பிட்டுள்ளது. இந்த வைரஸ் தொடர்பில் ஏற்கனவே அறிந்திருப்பதால் அதனை கட்டுப்படுத்த முடியுமாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 22ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## முகவரி மாற்றம்

2024 ஆகஸ்ட் 1ம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இல, 56/20, குமாரகேவத்த, பெலவத்த. பத்தரமுல்ல இல் இயங்கி வந்த CENTRE FOR PEACEBUILDING AND RECONCILIATION நிறுவனமானது இடமாற்றப்பட்டுள்ளது.

**புதிய விபரங்கள்**
**Centre for Peacebuilding and Reconciliation.**
